| 26 | .. | தித்தஎதேஏன (366,512 ம, 357,033 ம உரிமைப்பட்டங்களில் சொல்லிய காணிகள்) | 1 | 2 | 7 |
| 27 | .. | தித்தஎதேஏன (றோட்டத்திற்குச் சேமிப்பு) .. .. | 0 | 1 | 27 |
| 28 | .. | யாயேதெனியேஏனேஹேக்கலான, புசலியவலகாவஏன .. | 0 | 2 | 22 |

| காணித்துண்டு. | காணியினது பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 29 | புசலியவலகாவலனேமூக்கலான | 0 | 2 | 35 |
| 30A | யாயேதெனியேஎல | 1 | 0 | 14 |
| 30 | ஷை | 0 | 0 | 30 |
| 31 | அடிப்பாதை | 0 | 0 | 13 |
| 33 | குனுபெறுவேமூக்கலான, கிரிகலேமூக்கலான, கனுககெலேமூககலான, எல்ல காவமூக்கலான | 169 | 0 | 9 |
| 34 | கனுககெலேவன | 0 | 2 | 7 |
| 37 | இகலகனத்தேவதத | 1 | 1 | 38 |
| 40 | குனுபெறுவேதொல | 0 | 1 | 16 |
| 40B | ஷை | 0 | 0 | 17 |
| 41 | கல்கொடேகேன, அன்னக்ககலமூக்கலான | 5 | 1 | 18 |
| 42 | கலகொடேகேன்யாய, அன்னக்ககலகேன்யாய, அன்னக்ககலமூக்கலான, புகுஅறமபேகேன்யாய, தித்தஎதேகாவகேன | 61 | 3 | 33 |
| 43 | அடிப்பாதை | 0 | 0 | 29 |
| 44 | தித்தஎதேகாவமூக்கலான | 6 | 0 | 23 |
| 45 | தித்தஎதேகேன | 0 | 2 | 31 |
| 47 | மேகொடபதவன | 3 | 1 | 21 |
| 48 | அடிப்பாதை | 0 | 0 | 6 |
| 48A | ஷை | 0 | 0 | 3 |
| 48B | ஷை | 0 | 0 | 2 |
| 48C | ஷை | 0 | 0 | 10 |
| 48E | ஷை | 0 | 0 | 1 |
| 48F | ஷை | 0 | 0 | 7 |
| 49 | ஷை | 25 | 3 | 30 |
| 50 | கதபொடஹின்னேமூக்கலான | 3 | 3 | 19 |
| 50½ | வத்துறகன்னல | 0 | 0 | 33 |
| 50½A | ஷை | 0 | 0 | 25 |
| 50½B | ஷை | 0 | 0 | 3 |
| 51 | வத்துறகன்னஎலகாவகேன அல்லது கனத்தேவன | 1 | 1 | 19 |
| 52 | கெகுனககதெனியேஓவித | 0 | 3 | 2 |
| 53 | ஷை | 0 | 2 | 0 |
| 54 | வத்துறகன்னஎலகாவவதத, கமஎதிகெதரகாவஓவிதேவதத | 0 | 2 | 11 |
| 55 | கமஎதிகெதரகாவவதத | 1 | 0 | 14 |
| 56 | ஷை | 0 | 1 | 30 |
| 57 | ஷை | 0 | 0 | 25 |
| 58 | ஷை | 0 | 0 | 37 |
| 59 | கெகுனககதெனியேவனதத | 0 | 1 | 10 |
| 60 | கெகுனககதெனியேகுமபுற | 5 | 3 | 34 |
| 61 | கெதன்துறஙகனத்தேவதத | 0 | 3 | 23 |
| 62 | ஷை | 0 | 2 | 24 |
| 63 | ஷை | 1 | 1 | 2 |
| 64 | பாஓவததகாவவன | 0 | 2 | 15 |
| 65 | பாஓவதத | 0 | 1 | 11 |
| 66 | ஷை | 0 | 1 | 0 |
| 68 | உடஹெகெதறவததேவன, பகாலகெதறவததேவன | 0 | 1 | 19 |
| 69 | போமஓவேவதத | 0 | 0 | 36 |
| 70 | பகாலகெதறவதத | 0 | 1 | 7 |
| 71 | ஷை | 0 | 0 | 32 |
| 72 | உடஹகெதறவதத | 3 | 0 | 31 |
| 73 | உடஹகெதறவததேஓவித, போமஓவேவததேஓவித | 0 | 1 | 22 |
| 74 | போமஓவேவதத | 1 | 0 | 0 |
| 75 | ஷை | 1 | 2 | 15 |
| 77 | ஹல்பக்கேவதத | 0 | 1 | 10 |
| 78 | ஷை | 1 | 0 | 37 |
| 79 | எலகாவவததகாவவன, ஹல்பகேவததேவன | 0 | 3 | 2 |
| 80 | எலகாவவதத | 1 | 0 | 10 |
| 82 | கதபொடஹின்னேமூக்கலான | 27 | 3 | 7 |
| 83 | எலகாவவதத | 0 | 1 | 9 |
| 84 | வெலேவதத அல்லது எல்காவவதத | 0 | 3 | 16 |
| 85 | ஹல்பகேவததகாவஓவித, வெலேவததகாவஓவித | 0 | 2 | 32 |
| 86 | ஹல்பகேவதத | 0 | 1 | 24 |
| 87 | ஹல்பகேவததேவன, மடிததவியத்தேவனத | 0 | 1 | 29 |
| 88 | அதவிலேதெனிய, போமஓவவததகாவதெனிய | 1 | 2 | 33 |
| 89 | போமஓவேவதத | 0 | 3 | 17 |
| 90 | தெல்ககயதமந்தியகொடெல்ல, மல்விதெனியேகொடெல்ல | 0 | 0 | 28 |
| 91 | பொதுகொலபிட்டியேவேல்யாய, தெல்ககயதமந்தியேகுமபுற, மல்விதெனியேகுமபுற, மெ காடகஓகெதியேகுமபுற | 18 | 1 | 1 |
| 92 | மேகொடகஓகெதியேகொடெல்ல | 0 | 1 | 25 |
| 93 | மடித்தெவியத்தேகொடெல்ல அல்லது பொல்கொடெல்ல | 0 | 2 | 4 |
| 94 | மடித்தெவியத்தகாவ ஓவிதேவதத | 0 | 2 | 9 |
| 95 | எகொடமடித்தவியத்தகாவஓவித அல்லது மேகொடகுமபுறகாவஓவித | 0 | 2 | 25 |
| 96 | பொதுகொலபிட்டியேகொடெல்லேவதத | 0 | 3 | 21 |
| 97 | பொதுகொலபிட்டியேகுமபுற | 2 | 1 | 28 |

| காணித்துண்டு | காணியின்பெயர் | விசாலம் ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 98 | கல்கொடேவன | 0 | 0 | 39 |
| 100 | ஷை. | 0 | 1 | 31 |
| 101 | பந்தரவன, கல்கொடவன | 0 | 1 | 23 |
| 102 | கல்கொடேவன | 0 | 0 | 20 |
| 103 | பொதுகொலபிட்டியகொடவதத அல்லது கல்கொடவனேவதத | 3 | 0 | 14 |
| 104 | ஒளாறெண்டன்தோட்டம, கல்கொடேவனேவதத | 0 | 0 | 8 |
| 105 | பொதுகொலபிட்டியவன அல்லது கல்கொடவனேவதத, ஒளாறெண்டன்தோட்டம | 1 | 0 | 1 |
| 106 | பொதுகொலபிட்டியேதெனிய | 0 | 1 | 36 |
| 107 | ஷை. | 9 | 2 | 17 |
| 108 | ஒளாறெண்டன்தோட்டம (165,758ம உரிமைப்படத்திற் சொல்லிய காணியின்பகுதி) | 0 | 1 | 3 |
| 109 | ஆதமமகேவிலேகுமபுறேகொடெல்ல | 0 | 1 | 23 |
| 110 | பொதுகொலப்பிட்டியேகொடெல்ல | 1 | 3 | 0 |
| 111 | கமஎதிகெதரகாவவன, பொதுகொலப்பிட்டியகொடவன | 0 | 3 | 12 |
| 112 | ருஜபெதவுந்தபுவலகாவவனேவதத | 0 | 2 | 30 |
| 113 | ஷை. | 0 | 0 | 36 |
| 114 | ருஜபெதவுந்தபுவலகாவவன | 1 | 0 | 25 |
| 115 | ஷை. கெகுனககதெனியேவன | 0 | 3 | 23 |
| 116 | அடிப்பாதை | 0 | 0 | 2 |
| 117 | கமஎதிகேவதத, ருஜ்பெதவுந்தபுவலகாவவனேவதத | 0 | 1 | 22 |
| 118 | ருஜபெதவுந்தபுவலகாவவனேவதத | 0 | 1 | 23 |
| 119 | கமஎதிகெதரகாவவதத | 0 | 0 | 20 |
| 120 | அடிப்பாதை | 0 | 0 | 5 |
| 121 | மிலலகாவகுமபுறேதெனிய | 3 | 1 | 7 |
| 122 | கமஎதிகெதரசாவஅ அஹுதவதத | 0 | 2 | 21 |
| 123 | மில்லககாவவதத, கமஎதிகெதரகாவவதத | 0 | 1 | 39 |
| 124 | விலகொலதெனியேதோட்டம, ஒளாறெண்டன் தோட்டம (165,758 ம உரிமைப் படத்திற் சொல்லிய காணியின் பகுதி) | 44 | 0 | 3 |
| 127 | விலகொலதெனியதோட்டம அல்லது களாறெணடன்தோட்டம | 1 | 1 | 33 |
| 128 | தொலபெந்திகபள்ளேகுமபுற | 1 | 2 | 7 |
| 129 | கல்பெந்திகபள்ளகாவகேமு அல்லது மதங்ககாவசேன | 0 | 2 | 16 |
| 130 | றெயில்வே சேமிப்பு | 6 | 3 | 21 |
| 130B | ஷை. | 0 | 1 | 8 |
| 130D | ஷை. | 2 | 2 | 34 |
| 130F | ஷை. | 4 | 1 | 24 |
| 131 | கமஎதிகெதரகாவ அஹுக்வத்த, தொலமெதகா பொல்லகாவவத்த | 2 | 3 | 34 |
| 132 | கமஎதிகெதரகாவவதத | 0 | 3 | 15 |
| 133 | ஷை. | 0 | 2 | 2 |
| 134 | கமஎதிகெதர காவவததவன | 0 | 3 | 6 |
| 135 | கமஎதிகெதர காவதத | 0 | 3 | 20 |
| 136 | ஷை. | 0 | 2 | 34 |
| 137 | ஷை. | 0 | 1 | 37 |
| 138 | ஷை. | 0 | 1 | 0 |
| 139 | கமஎதிகெதர காவதத | 3 | 3 | 22 |
| 141 | கமஎதிகெதர காவதெனியே அஸ்வெட்டும | 0 | 1 | 13 |
| 142 | வதுறகன்ன எலகாவதத | 1 | 0 | 8 |
| 143 | கமஎதிகெதரகாவ ஓவிதேவதத | 0 | 1 | 38 |
| 144 | வதுறகன்ன எலகாளவன | 0 | 1 | 2 |
| 145 | வதுறகன்ன எலகாவவதத | 0 | 1 | 23 |
| 146 | வதுறகன்ன எலகாவவன, மின்னெரிகன்தேவன்யாய | 2 | 0 | 8 |
| 147 | வெலிகெலே மூக்கலான, கடபொத கின்னே மூக்கலான | 61 | 2 | 16 |
| 147½ | ஷை. | 4 | 1 | 31 |
| 148 | கதபொடகின்னே மூக்கலான | 7 | 1 | 28 |
| 149 | ஷை. | 5 | 1 | 16 |
| 150 | கதபொடகின்னே மூக்கலானேவதத | 0 | 0 | 20 |
| 151 | வதுறகம எலகாவவனேவதத | 1 | 2 | 26 |
| 152 | மாறங்காஸ்தெனிய | 0 | 1 | 28 |
| 153 | ஷை. | 1 | 2 | 15 |
| 154 | இம்புலகாவகேனேவதத | 1 | 2 | 25 |
| 156 | அத்தலவததகாவகுமபுறயாய, தலபெந்திகபொல்லகாவகுமபுற, பந்தலாவேகும புற, நாககுமபுற, கமஎதிகெதரகாவதெனியாய, மாறங்காஸ்காவகுமபுறயாய | 44 | 1 | 27 |
| 157 | இமபுலகாவகேனேவதத, அல்லது மாறங்காஸ் தெனியேசேன | 1 | 1 | 4 |
| 158 | இமபுலகாவகேனேவததேகெல்ல | 0 | 1 | 25 |
| 159 | கதபொலகின்னே மூக்கலான | 0 | 0 | 21 |
| 160 | மல்தொல | 0 | 0 | 24 |
| 160A | ஷை. | 0 | 0 | 4 |
| 161 | கதபொடகின்னே மூககலான | 4 | 1 | 38 |
| 162 | மலதொல | 0 | 0 | 21 |
| 163 | கதபொடகின்னே மூக்கலான, அதமபககதெனியே மூக்கலான | 1 | 2 | 0 |
| 164 | கதபொடகின்னே மூக்கலான | 0 | 2 | 5 |
| 165 | எதமபாஸ்தெனிய, தியறெல்லேதெனிய | 0 | 0 | 28 |
| 166 | ஷை. | 1 | 2 | 31 |
| 169 | கொஸ்பெலவதத, அல்லது ஆறிட்டகொட | 2 | 2 | 22 |
| 170 | பந்தலாவேஸ்மத்தேகேன அல்லது ஆறிட்டகொட | 1 | 1 | 15 |

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|
| 171 | எதம்பகாஸ்தெனியேகுமபுற திகெருல்லேகுமபுற, | 1 | 0 | 13 |
| 172 | இகலபந்தலாவேவதத | 1 | 0 | 25 |
| 173 | இகலபந்தலாவேகேன | 0 | 1 | 13 |
| 175 | றததொலேதெனிய(346,154 உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) | 0 | 0 | 23 |
| 177 | கெவுறகவெல தோட்டம, றததொலேமூக்கலான, எல்லேஉடகேன, எல்லேஉடகேனேவத்த (197,977 ம, 340,471 ம, உரிமைப்படங்களில் சொல்லிய காணிகளும 258,500 ம, 346,154 ம, 258,519 ம, உரிமைப்படங்களில் சொல்லிய காணிகளின் பகுதிகளும). | 71 | 0 | 6 |
| 177A | அடிப்பாதை (258 519 ம் உரிமைப்படத்திற சொல்லிய காணியின் பகுதி) | 0 | 0 | 3 |
| 177B | பழைய அடிப்பாதை | 0 | 0 | 3 |
| 178 | அடிப்பாதை (258 500 ம உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) | 0 | 0 | 21 |
| 179 | புதுமகாவெல தோட்டம (258,500 உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) | 3 | 2 | 2 |
| 181 | றங்கலாயேவதத, கொர்ணகாறகேவதத, தென்னேபுஸ்ஸேவதத, உக்குகிரியலாயேவதத, இகலகெதரவதத | 5 | 1 | 19 |
| 182 | புதுமகாவெல தோட்டம, (258,500 ம, உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) | 25 | 2 | 18 |
| 192 | தெமோதர எல்லே மூக்கலான, அல்லது புதுமகாவெல தோட்டம | 0 | 2 | 3 |
| 193 | அடிப்பாதை, (258,500 ம உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி | 0 | 0 | 3 |
| 194 | புதுமகாவெல தோட்டம 258,500 ம உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி | 4 | 0 | 21 |
| 195 | ஷை ( ஷை ) | 31 | 2 | 28 |
| 197 | அன்னக்கல மூக்கலான் அல்லது புதுமகாவெல | 0 | 0 | 19 |
| 198 | அடிப்பாதை (258,500 ம, உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) | 0 | 0 | 24 |
| 199 | புதுமகாவெல தோட்டம ஷை ) | 21 | 2 | 12 |
| 201 | மெதகெறரவதத, பலஎல்லாயேவதத | 6 | 0 | 30 |
| 202 | அடிப்பாதை, (258,500 ம, உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) | 0 | 0 | 11 |
| 203 | புதுமகாவெல தோட்டம ( ஷை ) | 7 | 0 | 15 |
| 207 | எல்லகாவலியத்த | 0 | 1 | 28 |
| 209 | உடுமுல்ல | 0 | 1 | 30 |
| 210 | உடுமுல்லே ஓவித, | 0 | 1 | 28 |
| 211 | மீகாகனத்தன | 0 | 2 | 35 |
| 212 | ஷை | 0 | 2 | 16 |
| 214 | றததொலகாவ அஸ்வெட்டும, உடுமுல்லேகுமபுற மகாகுமபுற, றததொலேதெனிய, பதகடகுமபுறகாவகுமபுற, அத்தனகுமபுற, தங்கெதியேகுமபுற | 16 | 3 | 6 |
| 216 | பந்தலாவேகேனேவத்த | 0 | 1 | 22 |
| 217 | தங்கெதியகுமபுறகாவவத்த, நாகாவத்த | 8 | 1 | 9 |
| 218 | லிந்தகாவகுமபுற | 0 | 3 | 19 |
| 219 | தங்கெதியேவத்த | 1 | 1 | 23 |
| 222 | பகாலகமமெத்தேவத்த | 0 | 0 | 36 |
| 224 | அத்தலேவத்த அல்லது திங்கிரிகாமி ஹிதப்புகெல்ல | 3 | 2 | 26 |
| 225 | அத்தலேவத்த | 9 | 0 | 10 |
| 226 | ஷை | 1 | 2 | 6 |
| 227 | ஷை | 0 | 1 | 11 |
| 228 | ஷை | 1 | 1 | 1 |
| 229 | ஷை | 0 | 2 | 7 |
| 230 | ஷை | 2 | 1 | 11 |
| 233 | றைபின்றேஞ்ஜ் | 1 | 1 | 21 |
| 234 | ஷை | 0 | 1 | 37 |
| 235 | பஹாலகமமெத்தேவ தகாவகுமபுறயாய, அத்தலேவத்தேதெனிய, அத்தலேவத்தேகுமபுற, தங்கெதியேவத்தேகுமபுற, அத்தலேவத்தேகுமபுறயாய | 23 | 3 | 6 |
| 236 | கெகதிகேலிந்தகாவகேன (327,045 ம உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) | 0 | 0 | 5 |
| 237 | விலகொலதெனியதோட்டம, விலகொலதெனியகேன, பீல்லேகாவகேனேவத்த, வாங்குவேவத்த (220,845 ம, 96,318 ம, 96,319 ம, 96,317 ம, 93,001 ம, 114,449 ம, 114,450 ம, 114,451 ம, 114,452 ம, 96,316 ம, 96,323 ம உரிமைப்படங்களிற் சொல்லிய காணிகளும 327,045 ம உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதியும) | 34 | 3 | 17 |
| 238 | தலபெந்திகபள்ளேதெனிய | 4 | 2 | 29 |
| 239 | தலபெந்திகபள்ளேகொடெல்ல, வொலகொலதெனியதோட்டம | 3 | 3 | 4 |
| 240 | தலபெந்திகபள்ளே அஹுத்கெல்ல | 0 | 0 | 34 |
| 241 | விலகொலதெனியதோட்டம் | 0 | 1 | 5 |
| 242 | ஷை | 0 | 3 | 17 |
| 242A | ஷை | 0 | 0 | 12 |
| 244 | விலகொலதெனிய தோட்டம் | 0 | 0 | 27 |
| 246 | கறந்தகெதிய, பதலகேனேவத்த (96,320 ம, 96,321 ம, 96,322 ம உரிமைப்படங்களிற் சொல்லிய காணிகள்) | 3 | 2 | 9 |
| 249 | பீல்லகாவதெனிய (91,213 ம, 91,215 ம உரிமைப்படங்களிற் சொல்லிய காணிகள்) | 0 | 2 | 34 |
| 250 | பீல்லகாவதெனிய | 4 | 3 | 27 |
| 251 | சந்தகேவத்த அல்லது எதமபகாவத்த | 0 | 0 | 27 |
| 252 | வாங்குவேகேன, | 0 | 0 | 17 |
| 253 | பீல்லகாவதெனியகாவகொடெல்ல அல்லது கெகதிகேகொடெல்ல | 0 | 2 | 12 |
| 254 | தெல்காகொடெல்வகாவகும்புற, தொறகொடலியத்த, விஹாரஹேனேலிந்தகாவகுமபுற | 12 | 0 | 1 |
| 255 | தெல்காகொடெல்லே அஹுத்கெல்ல | 0 | 2 | 16 |

| ஊணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 256 | .. | தெல்காகொடெல்லேவத்த .. .. .. .. | 0 3 14 |
| 257 | .. | தெல்காகொடெல்லே அஹுத்கெல்ல .. .. | 0 1 39 |
| 258 | .. | தெல்காகொடெல்லேகேன .. .. | 0 3 3 |
| 259 | .. | அஹுத்கெதரவத்த, கலேவத்த, விஹாரஹேனேபஹலகெல்ல, எபிதகெதரவத்த, மெதகெதரவத்த .. .. .. .. | 2 2 30 |
| 260 | .. | விஹாரகேனேபஹலகெல்ல .. .. .. .. | 0 1 32 |
| 264 | .. | வால்வஹியவத்த விஹாரகேனேவத்த, பொதுகொலபிட்டியவத்த, அத்பாங்கியேகேனேவத்த (91,214 ம, 107,424 ம 375,497 ம, 374,618 ம, 376,006 ம உரிமைப் படங்களிற் சொல்லிய காணிகள்) .. .. .. | 12 1 15 |
| 265 | .. | கொலமபதமபிகேவத்த .. .. .. .. | 0 1 13 |
| 266 | .. | கெதரவத்த (121,465 ம உரிமைப்படத்திற் சொல்லிய காணி) .. .. | 0 0 14 |
| 267 | .. | அதபாங்கியேகேனேவத்த, கடேவத்த .. .. .. | 0 3 3 |
| 268 | .. | பாஹுவத்த (69,461 ம உரிமைப்படத்திற் சொல்லிய காணியின் பகுதி) .. | 0 0 19 |
| 270 | .. | பாஹுவத்த .. .. .. .. .. | 0 3 39 |
| 271 | .. | வெலமுறேதெனிய .. .. .. .. | 0 1 25 |
| 272 | .. | வெலமுறேகொடகேன அல்லது பாஹுவத்த .. .. .. | 0 2 12 |
| 273 | .. | நெகதிகேகேன, நதாகேகேன .. .. .. | 3 2 19 |
| 274 | .. | வெலமுறேஉடஹகெல்ல, வெலமுறேபஹலகுமபுற, பொதுகொலபிட்டியேகுமபுற நெகதிகேகுமபுற, நிதகுமபுற .. .. .. | 12 2 7 |
| 275 | .. | பொதுகொலதெனிய .. .. .. .. | 4 2 37 |
| 276 | .. | வால்வயிபகுமபுற .. .. .. | 3 0 24 |
| | | மொத்தம் .. | 1,125 3 24 |

இரத்தினபுரி வி. உ. 8—1929.

---

## அரசாட்சியாரின் விளம்பரம்.

### 1892 ம் ஆண்டின் சிறுபட்டணச் சௌக்கியாதார சட்டம். U 332/28

1892 ம் ஆண்டின் சிறு பட்டணச் சௌக்கியாதாரசட்டத்தின் 9E (2) ம் பிரிவுக்கமைய வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் உள்ள சௌக்கியர்தாரச் சங்கத்தாரால் உண்டாக்கப்பட்டு அதிகார மந்திர சபையோடு கூடிய உத்தம தேசாதிபதி யவர்களால் அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள்.

உத்தமனுரவர்கள் கட்டளைப்படி,
எவ். ஜீ. ஹிறவ்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1929 ம் ஆடு மேமீ 14 ந் தேதி.

மேற்சுட்டிய ஒழுக்கவிதிகள். [9 E (2) (a) ம் பிரிவு.]

கூட்டங் கூடவேண்டிய நேரமும் இடமும் அக்கூட்டத்தில் கவனிக்கவேண்டிய ஒழுங்கும்.

1. சங்கத்தினுல் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படும் இடத்திலும் நேரத்திலும், நாட்களிலுமே சங்கத்தின் சாதாரணமான கூட்டங்கள் கூடும். அக்கிராசனரின் எண்ணப்படி அல்லது சங்கத்தின் இரண்டு அங்கத்தினரது எழுத்து மூலமாயுள்ள கேள்விப்படி எவ்விசேஷ கூட்டமும் கூட்டப்படலாம். ஆனல், அச்சங்கம் எக்கூட்டங்களையும் வேறு எந்த நாட்களிலாவது அல்லது மணித்தியாலத்திலாவது கூட்டுவது நியாயமுறையாகும்.

2. சங்கத்தைச்சேர்ந்த சகல காரியங்களுங்காகவும் அங்கத்தவரின் முதன்மையும், அதிகாரசேட்டத்துவமும் பின்வருமாறு இருத்தல்வேண்டும்:—

(a) உத்தியோக அதிகாரப்படி அக்கிராசனராய் இருப்பவர்.

(b) தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் "கசெற்" பத்திரிகையில் தங்கள் தங்கள் பெயர்கள் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கின்படி முதன்மையும் அதிகார சேட்டத்துவமு முடையவர்களாயிருப்பார்கள்.

3. கூட்டத்தில் கிரமமுறையை பரிபாலிப்பதுமன்றி தர்க்கிக்கப்படும் கிரமமுறையைக்குறித்த விஷயங்களில் அக்கிராசனர் தீர்ப்புச்செய்தல் வேண்டும்.

4. யாதாமொரு சாதாரண அல்லது விசேஷ கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட நேரம் வந்தவுடனே நிருவாகத்தொகையினர் ஒழுங்குசேர்ந்தவுடன், அக்கிராசனம் வகிக்கத் தத்துவமுடையவர் அக்கிராசனராவார், அப்பொழுது அச்சங்கம் கூட்டத்தைத் தொடங்கி நடத்தலாம்.

கூட்டத்திற்காகக் குறிக்கப்பட்ட நேரம் முடிந்து அரைமணி நேரம் சென்றதின்மேல் கூட்டங்கூடுவதற்கு வேண்டிய நிருவாகத் தொகையான அங்கத்தவர்கள் வந்திராவிடின் அக்கூட்டமோர் சாதாரண கூட்டமாயிருக்குமாகில் அக்கூட்டத்தை அடுத்துவரும் சாதாரண கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட நாள் வரைக்கும் தவணைபோடப்படலாம் அல்லது விசேஷ கூட்டமென்றுல் அது நடக்கவேண்டிய நாள் எதுவென்று குறிக்காதபடி தவணை போடப்படலாம்.

5 கூட்டத்தில் தர்க்கம் நடக்கும் வேளையில் அல்லது ஓர் அவசரகாரணத்தின் நிமித்தம் சங்கத்தின் விசேஷ அநுமதியோடன்றி, மற்றும் நேரத்தில் எந்த அங்கத்தவராவது ஒரு கேள்வியைக் கேட்க அல்லது ஒரு பிரேரணை கூற விரும்பின் அக்கேள்வியைப்பற்றி அல்லது அப்பிரேரணையைப்பற்றி சங்கத்தின் முந்திய கூட்டமொன்றில் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும் அல்லது அக்கேள்வியைக் கேட்க அல்லது அப்பிரேரணையைக் கூறவிருக்குந் தினத்திலிருந்து குறைந்த கணக்கு நாலு நாட்களுக்குமுன் எழுத்து மூலமாய் அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

6. அப்படி அறிவித்தல் கொடுக்கும் வேளையில் ஒவ்வொரு அங்கத்தவரும் அக்கேள்வி அல்லது அப்பிரேரணை எழுதப்பட்டுள்ள பிரதியொன்றை அக்கிராசனரிடம் கொடுத்தல் வேண்டும்.

7. சங்கம் வேறுவிதமாய் தீர்மானித்தாலேயொழிய கூட்டத்தில் கேட்கப்படும் கேள்விகளும் கூறப்படும் பிரேரணைகளும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட முறைப்படியே கேட்கப்படவும் கூறப்படவும் வேண்டும்.

8. ஒரு கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளாமல் விடப்பட்ட ஓர் பிரேரணை குறைந்தபட்சம் மூன்று மாசங்கழிந்ததின் பின்னன்றி மற்றப்படிக்கு மறுபடி கொண்டுவரப்படலாகாது. மேலும், ஓர் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பிரேரணைக்கு எவ்விதத்திலும் மாறுகவுள்ள எப்பிரேரணையும் மேற்சொல்லிய காலவெல்லை முடிவதற்குமுன் அங்கீகரிக்கப்படலாகாது.

9. ஓர் விண்ணப்பப் பத்திரத்தை அல்லது வேறு கடிதமெதையும் கொடுக்குமெவ்வங்கத்தவரும் அதிலடங்கியயாவும் அடக்க மரியாதையாய் எழுதப்பட்டதாய் இருப்பதற்கு உத்தரவாதமுடையவராய்க் கொள்ளப்படுவர். பத்திரத்தை யெழுதியவரின் பெயரும் மேல்விலாசமும் அதில் தெளிவாக எழுதியிராவிட்டால் சங்கத்தவர்முன் எப்பத்திரமும் அங்கத்தவரெவராலும் வைக்கப்படலாகாது.

10. சங்கத்தின் சாதாரண கூட்டத்தில் நடக்கவேண்டிய காரியங்கள் பின்வரும் ஒழுங்கின்படி நடத்தப்பட வேண்டும்:—

(a) முந்திய கூட்டத்தில் நடந்த காரியங்களைப்பற்றிய குறிப்புகள் வாசிக்கப்பட்டு அவைகளில் ஏதும் திருத்தங்கள் செய்யவேண்டியிருந்தால் அத்திருத்தங்கள் செய்யப்பட்டபின் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(b) மன்றுாட்டக்கடிதங்கள் விண்ணப்ப பத்திரங்கள் அல்லது சங்கத்திற்கு அனுப்பப்படும் வேறு கடிதங்கள் சங்கத்தின்முன் வைக்கப்பட்டு அவைகளில் செய்யவேண்டியவைகளைச்குறித்த கட்டளைகள் எழுதப்படவேண்டும்.

(c) மற்றைய காரியங்கள் எல்லாம் பின் சொல்லியிருக்கும் ஒழுங்குப் புத்தகத்தில் காட்டப்பட்டிருக்கும் முறையின்படியே கவனிக்கப்படவேண்டும்.

11. ஓர் ஒழுங்குமுறைப் புத்தகம் வைத்து அதில் ஒவ்வொரு கூட்டத்திலும் பேசப்படவேண்டிய விஷயங்கள் ஒன்றின்பின்ஞென்றாக எழுதி இலக்கமிட்டு வைத்திருக்கப்படல் வேண்டும்.

12. லேககர் ஓர் குறிப்புப்புத்தகம்வைத்து அதில் சங்கத்தில் ஒவ்வொரு கூட்டத்திலும் நடக்கும் காரியஙகளைக்குறித்து எழுதிவைத்தல் வேண்டும். மேலும் அப்புத்தகத்தில் எழுதியுள்ள ஒவ்வொரு கூட்டத்தின் குறிப்புகளும், பிந்திவரும் எக்கூட்டத்திலும் உறுதிப்படுத்தப்பட்டபின்மேல், அவைகள் அவ்வண்ணம் உறுதிப்படுத்தப்படும் கூட்டத்தின் அக்கிராசனரால் கையொப்பமிடப்பட வேண்டும்.

13. சங்கத்திற்கு அனுப்பப்படும் எல்லா முறைப்பாடுகளையும் சங்கத்தின் உத்தியோகத்தர்களால் அனுப்பப்படும் அறிக்கைபத்திரங்களையும் நேர் முந்திய கூட்டம் நடந்ததின்பின் அககிராசனரால் செய்யப்பட்ட காரியங்களைப்பறறிய குறிப்புகளையும் சஙகத்தின் லேககர் சங்கத்தின்முன் கொண்டுவர வேண்டும்.

14. ஒவ்வொரு விசேஷ கூட்டத்தைக்குறித்தும் அக்கூட்டம் நடப்பதற்கு குறைந்தபட்சம் இரண்டு நாட்களுக்குமுன் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் அறிவித்தல் ஒப்புவிக்கப்படவேண்டும் அல்லது அவர் வசிக்குமிடத்தில் விடப்படல வேண்டும்.

(9E (2) (b) ம் பிரிவு.

கட்டுவேலைகள் செய்துமுடித்தலும், தெருக்களும், ரோட்டுகளும், பாலங்களும்.

சனங்களின் உபயோகத்துக்கான கட்டுவேலைகள் செய்வதற்கு வேண்டிய பணத்தொகைகளை முன்னமே ஆயத்தப்படுத்திச் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட செலவுமதிப்புப் பத்திரங்களின்படி நியமித்தல் வேண்டும்.

(9E (2) (c) ம் பிரிவு). கோதுமை அப்பம்.

1. கோதுமைஅப்பம் செய்வதற்காகப் பாவிக்கப்படும் மா, தண்ணீர், மற்றும் சாமான்கள் நல்லதாகவும் சுகாதாரத்திற்கு ஏற்றதாயும் இருக்க வேண்டும். அக்கிராசனரிடமிருந்து காலத்துக்குக்காலம் எழுத்து மூலம் அதிகாரம்பெறும் எவரும் அக் கோதுமை அப்பங்களில மாதிரிககாக சிலவற்றைக் கேட்டு அவைகளின் பணத்தைக் கொடுத்து வாங்கிக்கொள்வது நியாயமுறையாகும்.

2. ஒவ்வொரு கோதுமை அப்பத்தின் மேற்பக்கத்திலும் அதின் நிறையைத் தெளிவாய்க்காட்டும் ஓர் அடையாளம் வரையப்பட்டிருக்க வேண்டும். அப்படிக் குறிக்கப்பட்ட நிறை நிறைக்குக் குறைவாயுள்ள கோதுமை அப்பத்தை விற்குமெவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவராவர்

9E (2) (d) ம். பிரிவு.

பொதுச்சந்தைகளை ஸ்தாபித்தலும் ஒழுங்குபடுத்தி நடத்தலும கோதுமை அப்பக்கடைகள் தேத்தண்ணீர் கோப்பிககடைகள், இறைச்சிக்கடைகள், மாட்டுக்காலைகள் முதலியவைகளைக்கொண்டு நடத்தலும்.

1. ஓர் பொதுச்சந்தையை ஸ்தாபிக்கச் சங்கத்தினால் தீர்மானிக்கப்படும் எவ்வேளையிலும் அக்கிராசனர் அச்சந்தை எத்தேதியில் முதல் முதற் கூடுமென்று பறைசாற்றி அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

2. எந்தச் சௌக்கியாதார சங்கப்பட்டணத்துக் கென்றேனும் சங்கத்தாரால் ஓர் பொதுக்சந்தை ஸ்தாபிக்கப்பட்டு இருக்குமிடத்து எவர்களும் தங்களுக்கென்று அப்பட்டண எல்லைகளுக்குள் சங்கத்தாரிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொள்ளாமல் ஓர் சந்தை கூட்டப்படாது.

3. எல்லாப் பொதுச்சந்தைகளும் தினமும் காலை 6 மணி தொடங்கி மாலை 9 மணி வரையும் கூடியிருக்க வேண்டும். அச்சந்தையில் போதிய வெளிச்சங்கள் இருக்கும்படி செய்வது சங்கத்தாரின் அல்லது குத்தகைக்காரனின் கடமையாகும்.

4. ஓர் பொதுச் சந்தைக்காகக் கொடுபடவேண்டிய சகல வாடகைகளும் வேதனங்களும் அக்கிராசனர் அல்லது குத்தகைக்காரன் அல்லது அவைகளை அறவிடப்படும்படி சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட வேறு ஆட்களுக்கு அல்லது அவர்களுடைய குத்தகைக்காரருக்கு கேட்ட நேரமே முற்பணமாகக் கொடுக்கப்படல் வேண்டும்.

5- சந்தையில் ஒட்டிவிடப்பட்ட அறிவித்தல் மூலம் வைத்திருக்கப்படாது அல்லது விற்கப்படாதென்று தடுக்கப்பட்ட எந்தப் பொருளையும் எவரும் வைத்திருக்கவேனும் விற்பதற்காக வெளியாக வைக்கவேனும்படாது.

6. எந்த மீன்கடையிலும் எவராவது மீன் அல்லது உப்பிட்டமீன் தவிர வேறு எந்தப் பண்டங்களேனும் பொருட்களேனும் வைத்திருக்கவாவது வெளியாக வைக்கவாவது படாது.

7. காய்கறிச் சந்தைககுள் பழங்களும் காய்கறிகளுமேயல்லாமல் புது இறைச்சியல்லது மீன், அல்லது உப்பிடப்பட்ட இறைச்சி அல்லது மீன் அல்லது சமைக்கப்பட்ட போசனம் எதுவும் அல்லது வேறெந்தப் போசனபதார்த்தமும் விற்கவேனும் விற்பதற்காக வைத்திருக்கவேனும் படாது.

8. சந்தைக்குள் உள்ள எந்தக் கடையையும் எடுத்திருக்குமெவரும் சந்தைக்குள் உள்ள எப்பகுதியையும் அடைககவேனும் அல்லது ஓர் மேற்கட்டியை, மறைப்பை அல்லது ஸ்திரமாய்ச் சேர்த்துக்கட்டப்பட்ட எதையும் கட்டவேனும் படாது. மேலும் அவன் அக்கிராசனரின் அனுமதி பெற்றலாமல் எப்பொருள்களையாவது மாலை ஒன்பது மணிக்கும் காலை ஆறு மணிக்கும் இடையில் சந்தைக்குள் வைக்கவுங் படாது.

9. சந்தைக்குள் ஓர் கடையை அல்லது இடத்தை அல்லது ஆசனத்தை உடைய ஒவ்வொருவரும் அக்கடைய, இடத்தை அல்லது ஆசனத்தை துப்பரவாகவும் குப்பை கஞ்சல் இல்லாமலும் வைத்திருக்கவேண்டும். தொற்றும் அல்லது பரம்பும் வியாதியுடையவர் அல்லது கொஞ்சக் காலத்துக்குமுன் அப்படிப்பட்ட வியாதி பிடித்திருந்தவர் எவராவது அப்படியான வியாதியுடையவரெவரையும் கொஞ்சக்காலத்துக்குமுன் பராமரித்து வந்தவர் அப் பொதுச் சந்தைக்குள் உள்ள கடையில் அல்லது இடத்தில் அல்லது ஒரு ஆசனத்திலிருக்கவேனும், எப்பண்டங்களையும் அதில் விற்கும்படியாக வெளியாக வைக்கவேனும் படாது.

10. ஒரு பொதுச் சந்தையில் எப்பகுதியிலேனும் இருக்கும் அல்லது அதைப்பாவித்துவரும் எவரும்.

(a) அச்சந்தையில் அல்லது அதறகுச் சமீபமாக ஒழுங்கீனமாய் நடக்கவேனும் எவ்வசங்கியமும் செய்யவேனும் படாது.

(b) அச்சந்தை யெதிலும் சமைக்கப்படாது.

(c) மாலை ஒன்பது மணிக்குச் சந்தைகுலைந்ததின்பின் கேட்பவர் திருப்திப்படக்கூடியதாக போதிய நியாயம் காட்ட இயலாது அச்சந்தையில் நிற்றவேனும் அல்லது அவ்விடத்திற் சோம்பித்திரிய வேனும் படாது.

(d) சந்தைக்குள் அல்லது சமீபத்தில் சங்கத்திற்கு உரித்தாயுள்ள கட்டடங்களின் எப்பகுதியையாவது கடைகளையாவது அல்லது விளக்குகளையாவது அல்லது சங்கத்துக்குரிய வேறெந்தச் சாமான்களையாவயாவது பழுதுபடுத்தவேனும், வேறு எவ்விதத்திலும் கெடுத்துவிடவேனும், அச்சந்தையில் பாவிப்புக்காக வைக்கப்பட்டிருக்குந் தண்ணீரை எவ்விதமாயாவது அல்சிப் படுத்தவேனும் படாது.

11. சௌக்கியாதார சங்க எல்லைக்குள் விற்பதற்காக வெளியாக வைக்கப்பட்டிருக்கும் எவ்விறைச்சியையாவது, கோழிகளையாவது, மீனையாவது, வேட்டையாடிய மிருகங்களையாவது, மாமிசத்தையாவது காய்கறியையாவது, பழங்களையாவது அல்லது வேறு எந்தப் போசவபதார்த்தத்தையாவது சுகத்துக்காகாதவைகள் அல்லது மனுஷர் போசனமாகப் புசிப்பதற்கு உதவாதவைதளென்று சங்கத்தின் பரிசோதகர் அல்லது மேல்விசாரணைக்காரன் கண்டு அவைகளைப் பிடிக்கும்போது அவைகளை அந்த ஸ்தானத்தின் வைத்திய உத்தியோகஸதரிடம் அல்லது அவரில்லாத நேரங்களில் அல்லது அவ்விடத்தில் அவ்வித உத்தியோகஸ்தரொருவர் இல்லாதிருந்தால், பொலீஸ் நீதவானிடத்திலும், பொலீஸ் கோடொன்று இல்லாத விஷயத்தில் கிராமக்கோட்டு நீதவானிடத்திலும் கொண்டுபோவது அப்பரிசோதகருக்கு அல்லது மேல்விசாரணைக் காரனுக்கு நியாயமுறையாகும் அவ்வைத்திய உத்தியோகஸ்தர், பொலீஸ் நீதவான் அல்லது கிராமக்கோட்டு நீதவான் அந்த இறைச்சி, கோழிகள், மீன், காய்கறி, பழங்கள் அல்லது போசனபாதார்த்தங்கள் மனுஷர் சாப்பிடுவதற்கு உபயோகமற்றவையனக் காணுமிடத்து, அவர் அவைகளை விற்பனவுககென்று வெளியாக வைக்கப்படாதபடி அல்லது போசனமாகப் பாவிக்கப்படாதபடி தடுக்கும் பொருட்டாக அவைகளை அழித்துவிடும்படி அல்லது தொலைத்துவிடும்படி கட்டளைபண்ணலாம்.

12. சந்தை எல்லைக்குள் யாவும் ஒழுங்காய் நடக்கும்படிசெய்வது சந்தைக்காவலனின் அல்லது குத்தகைக்காரனின் கடமையாகும். சங்கத்தால் எப்பொதுச் சந்தையையும் மேல்விசாரித்து வரும்படி அல்லது வாடகைகளை அல்லது வேதனங்களை அறவிடும்படி, அல்லது சந்தையில் யாவும் ஒழுங்காக நடக்கவும் சந்தை துப்புரவாக வைத்திருக்கப்படும்படி செய்வதற்கும் நியமிக்கப்பட்ட எவரும் தன் கடமையை நடத்தும் வேளையில் அவரைத் தடைபண்ணும் அல்லது எதிர்க்கும் ஒவ்வொருவரும் ஓர் அடாத்துச் செய்த குற்றமுடையவராவர்.

13. ஓர் குறிக்தசாதிமீனை சனங்கள் சாப்பிடுவது தீங்கை விளைக்குமென்று அல்லது ஓர் கொள்ளைநோய் பரம்பும் காலத்தில் ஓர் குறித்த சாதி பழத்தை அல்லது காய்கறியைச் சாப்பிடுவது தீங்கை விளைவிக்குமென்று சங்கத்தாருக்குக் காணப்படும் எவ்வேளையிலும் பறைசாற்றுவித்து அல்லது வேறு வகையாகப் போதிய அறிவித்தல் கொடுத்து, சங்கத்தின் அபிப்பிராயப்படி தேவையென்று காணும் எக்காலவுதுக்கும் அவ்விதமீனை, பழத்தை அல்லது

காய்கறியை சங்க எல்லைக்குட்பட்ட எச்சந்தையிலிலும் அல்லது வேறு இடத்திலும் விற்கவிடாது தடுப்பதும், அவ்வித அறிவித்தல் கொடுத்ததின்மேல் அவைகள் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்டிருந்தாலென்ன வைக்கப்பட்டிரா விட்டாலென்ன அவைகளைப் பிடித்து சங்கத்தார் அல்லது அக்கிராசனர் கட்டளையிடும் வண்ணம் அழித்துவிடும்படி செய்துவரும் சங்கத்தாருக்கு நியாமுறையாகும்.

14. எவராவது சந்தை வளவுக்குள் சாமான்கள் ஏற்றவும் இறக்கவும் போதிய நேரத்திற்கு மேலதிகமாக ஓர் வண்டியை அல்லது கரத்தையை நிற்கவிடப்படாது.

15. சங்கத்தினுல் வைக்கப்பட்டிருக்கும் மூடியுள்ள வாளிக்குள் அல்லாமல் சந்தைக்குள்ளாவது அல்லது அதற்குச் சேர்ந்த வளவுக்குள்ளாவது அருவருப்புண்டாக்கக் கூடிய அல்லது சனங்களின் சுகத்திற்கு கேடு வருவிக்கக்கூடிய குப்பை, கூளம், எலும்புகள், மிருகங்களின் தோல்கள் முதலியவைகளை ஒருவரும் குவித்து வைக்கப்படாது.

16. அக்கிராசனர் ஒவ்வொரு சந்தையிலுமுள்ள குத்தகைகாரனுல் அல்லது சங்கத்தின் கீழ் உத்தியோகத்தர்களினுல் அறவிடப்பட வேண்டிய வாடகைகளையும் கூலிகளையும் காட்டும் ஓர் அட்டவணையை ஆங்கிலம், சிங்களம், தமிழ் முதலிய பாஷைகளில் அச்சிடுவித்து சந்தைக்குள் எவரும் எளிதில் பார்க்கக்கூடிய விடத்தில் வைக்கப்படும்படி செய்தல் வேண்டும். அப்படி நியமிக்கப்பட்ட வாடகைகளுக்கும் கூலிகளுக்கும் மேலதிகமான தொகையை எவராது கேட்பது அல்லது வாங்குவது நியாயமுறையாகாது.

17. மீன் அல்லது இறைச்சி விற்க இடங் கொடுக்கப்படும் பொதுச் சந்தைகளில் மீன் அல்லது இறைச்சி விற்பதற்காகப் புறம்பாக வைக்கப்பட்டிருக்கும் இடங்களன்றி வேறு எந்த இடங்களிலாவது எவ்விதமான மீனையேனும் இறைச்சியையேனும் எவரும் கொண்டுவரவேனும் விறபனவுக்கென்று வைத்திருக்கவேனும், விற்கவேனும் படாது. அம்மீனவது இறைச்சியாவது வைத்திருப்பதற்காக விற்பனவுக்கென்று வெளியாக வைத்திருப்பதற்காக அல்லது விற்பதற்காக மாத்திரம் அவ்விடங்கள் பாவிக்கப்படல் வேண்டும்.

18. சௌக்கியாதா சங்கத்தார் தாம் தேவையெனக் காணும் பாகங்களை கடைகளுக்கென்று பிரித்து விடலாம்.

19. ஓர் பொதுச் சந்தைக்குள் உள்ள கடைகளை பன்னிரண்டு மாதத்திற்கு மேற்படாத எக்காலத்திற்கும குத்தகைச் சீட்டுகள் வாங்கிக் கொண்டு சௌக்கியாதார சங்கம் அக்கிராசனர் மூலமாகக் குத்தகை கொடுக்கலாம். சௌக்கியாதார சங்கத்தார் நியாயமென்று காணுவதும் குத்தகைக்காரர் உடன்பட்டுக் கொள்ளுவதுமான பொருத்தங்கள் அக்குத்தகைச் சிட்டுகளில் அடங்கியிருக்கலாம்.

20. மாடுகளையாவது, செம்மறியாடுகளையாவது, வெள்ளாடுகளையாவது, பன்றிகளையாவது, அல்லது வேறு மிருகங்களையாவது, அவைகளை விடுவதற்கென்று புறம்பாக வைத்திருக்கப்படும் இடங்களிலன்றி பொதுச் சந்தைகளிலுள்ள வேறு எந்த இடங்களிலும் ஒருவரும் கொண்டுபோகப் படாது. மேலும், சாமான்கள் ஏற்றும்போது அல்லது இறக்கும்போதன்றி மற்றப்படிக்கு, ஒருவரும் தனது வண்டியை, கரத்தையை அல்லது வேறு வாகனத்தை சந்தைக்குச் சேர்ந்த நிலத்தின் எப்பகுதியிலேனும் நிற்கவிடப்படாது.

21. தொற்றும், அல்லது பரம்பும், அல்லது சரும நோய்களினுல் பீடிக்கப்பட்ட அல்லது வருந்துகின்ற எவரும் ஒரு கடையி விருக்கவாவது அல்லது எவ்விதமான சாமான்களையும் விற்பனைக்காக வைத்திருக்கவாவது கூடாது.

22. சந்தை நிலத்திலாவது, அந்நிலத்திலுள்ள கட்டிடத்திலாவது, குடிசையிலாவது, கொட்டிலிலாவது அதற்கு அருகாகவுள்ள பெரிய ரோட்டுகளிலாவது ஒருவரும், கழிவு மாமிசம் ஊத்தை, அழுக்கு அல்லது குப்பை கொட்டவேனும், மலங்களித்து அசங்கியப்படுத்தவேனும் படாது.

23. ஒருவரும் எந்தப் பொதுச் சந்தைக்குள்ளேனும், அதற்கு அருகாகவுள்ள பெரிய ரோட்டுகளிலேனும் எந்த மிருகத்தையும் கொல்லவேனும் அல்லது அதன் தோலை உரிக்கவேனும் அல்லது பிணத்தைக் கீறிக் குடலை எடுக்கவேனும் படாது.

24. சௌக்கியாதார பரிசோதகர் சந்தை துப்புரவாக வைத்திருக்கப்படும்படியும் சந்தைக்கு வருகிறவர்கள் உபவிதிகளைக் கைக்கொண்டு நடக்கும்படியும் செய்து அவ்வுபவிதிகளை யாரும் மீறுமிடத்து அக்கிராசனருக்கு அதைக் குறித்து அறிவிக்க வேண்டும்.

### B.—கோதுமை அப்பக் கடைகளை வைத்து நடத்தும் விதம்.

1926 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 17 ந் தேதியையும் 7,546 இலக்கத்தையும் கொண்ட "கசற்" பத்திரிகையில் பிரசித்தப்படுத்தப்பட்ட உபவிதிகளை இங்கே சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்:—

### I. வது—பொது விதிகள்.

1. சிறு பட்டணங்களாகிய பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறையாகிய இடங்களில் யாழ்ப்பாணம் சௌக்கியதார சங்கத்தலைவரிடமிருந்து உத்தரவுபெறுமல் ஒருவராவது கோதுமை அப்பக்கடைகளை வைக்கக்கூடாது.

2. சௌக்கியாதார சபையாரால் நியமிக்கப்பட்டு அதிகார மந்திரசபையோடுகூடிய தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட சலாரைக் கொடுத்து பின்வரும் கொந்தீசகளுக்கமைய ஒருவர் உத்தரவு கேட்டால் சௌக்கியாதார சங்கத்தலைவர் 4 ம் விதிக்கிணங்க ஒரு உத்தரவு கொடுக்கக் கடவர்.

3. அப்படிக் கொடுக்கப்படும் உத்தரவுப்பத்திரம் ஒரு நீதிஸ்தலத்து நியாயாதிபதியினுல் அழிக்கப்பட்டாலொழிய உத்தரவுப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட காலம் வரையும் பெலப்பாயிருக்கும.

4. உத்தரவுப்பத்திரம் பெற்றவர் கோதுமை அப்பக்கடைகளுக்காகிய பிரமாணங்களை இரண்டு அல்லது கூடினதரம் மீறி நடந்து குற்றப்பட்டால் அப்படிக் குற்றவாளியாகக்கண்ட நீதிபதி அவருக்கு கொடுக்கப்பட்ட உத்தரவை அழித்துவிடலாம். அழித்தபின் சங்கத்தலைவரும் தன் விருப்பத்தின்படி வேறு ஒரு புது உத்தரவைக் கொடுக்காது மறுக்கலாம்.

5. எந்த சுகாதாரச் சோதனைக்காரராவது அல்லது சங்கத்தலைவரால் நியமிக்கப்படும் எவராவது அப்பம் செய்யப்படும் எல்லா நேரத்திலும் கடைக்குள் உட்பிரவேசிக்கவும் கடையையும் அங்குள்ள தளபாடங்களையும் இன்னும் வேண்டிய சாமான்களையும் சோதனை செய்யவும் உத்தரவு உண்டு.

6. கோதுமை அப்பக்கடைகளுக்காகிய பிரமானணங்களில் எவையையும் மீறி நடக்கும் எவரும் குற்றவாளிகளாவார்கள். அப்படிக் குற்றவாளிகளாகத் தீர்க்கப்படும்பொழுது ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத அபாரதத்திற் குள்ளாவார்கள்.

### II. வது—உத்தரவுப்பத்திரம் கொடுப்பதற்காகிய கொந்தீசகள்.

கீழே சொல்லப்படும் கொந்தீசகளுக்கமைய அப்பக்கடை யிருக்குமிடங்களி லிருந்தாலொழிய அப்பக்கடை வைத்திருப்பதற்கு ஒருவரும் உத்தரவு பெற உரித்துடையவராகார்.

1, (a) அப்பங்கள் செய்யுமிடங்கள் ஓட்டை உடைசல்களில்லாமல் போதிய காற்றும் வெளிச்சமும் வரக்கூடியதாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு அறையிலும் திறந்து மூடக்கூடிய கதவுகளுள்ள யன்னல்களிருக்கவேண்டும். அந்த அறையிலுள்ள நிலவிஸ்தாரத்தில் பதினைந்தில் ஒரு பங்காவது யன்னல்வெளி இருக்கவேண்டும்.

(b) ஒவ்வொரு அறையின் சுவர்களும் ஏழு அடி உயரத்திற்குக் குறையாமலும் செங்கல்லினுல் அல்லது மக்கிக் கல்லினுல் சாந்துசேர்த்து கட்டப்பட்டதும் சுண்ணும்பு வெள்ளையடிக்கப்பட்டதுமா யிருக்கவேண்டும்.

(c) எல்லாத் தாள்வாரங்களும் நிலத்திலிருந்து ஆறு அடி உயரத்தி லிருக்கவேண்டும்.

(d) நெடுநாளைக்கு நிலைத்திருக்கக் கூடியதான தடிதண்டுகள் கூரைக்கு போடப்பட்டிருக்க வேண்டும்.

(e) எல்லாவிதமான மரவேலைகளுக்கும் எண்ணெய்சேர்ந்த மை அல்லது சுண்ணும்பு பூசியிருக்கவேண்டும்.

(f) நிலத்துக்கு சீமேந்து போடப்பட்டிருக்க வேண்டும்.

(g) கட்டிடத்தைச் சுற்றி தண்ணீர் போகக்கூடிய வாய்க்கால்க ளிருக்கவேண்டும்.

2. (a) கோதுமை மா குழைக்கு மறை பன்னிரண்டு அடி அகலத்திற்குக் குறையாமலும் பதினைந்து அடி நீளத்திற்குக் குறையாமலும் இருக்கவேண்டும். அறையில் உட்புறத்தில் சுவர் நிலத்திலிருந்து நாலு அடிக்கு பளபளப்பான ஓடுகள் பதித்தும் அல்லது சீமேந்து பூசியும் இருக்க வேண்டும்.

(b) கோதுமை மா குழைக்கும் அறைக்கு காற்றும் வெளிச்சமும் வருவதற்கு இரண்டு பக்கங்களிலும் ஏழு அடி அகலத்திற்கு குறையாத வெளி இருக்க வேண்டும்.

(c) அப்பம் வதக்கும் அடுப்பின் கதவு மாகுழைக்கும் அறைக்கு நேர்எதிரி லிருக்கக்கூடாது.

(d) கோதுமைமா குழைக்குமறை சாந்துபோட்டு மூடி சுண்ணாம்பு வெள்ளையடித்ததாய் அல்லது பலகை நெருக்கமாயடைத்து மைபூசி அல்லது சுண்ணாம்பு வெள்ளை அடித்ததா யிருக்கவேண்டும்.

3. (a) அப்பம் சரிகட்டுகிறதற்காக பாவிக்கும் மாவாளிகள் மேசைகள் இன்னும் மற்றுமுள்ள தளபாடங்கள், நிலத்தையும் சுவர்களையும் கழுவிச் சுத்தப்படுத்தத் தேவையானபொழுது, வசதியின்படி எடுக்கவும் கழுவிமுடிந்தபின் திரும்ப வைக்கவும் கூடியதா யிருக்கவேண்டும்.

(b) அப்பஞ் செய்வதற்குப் பாவிக்கப்படும் மேசைகளின் மேற்பகுதி நன்றாய் முற்றியதும் இடைவெளியில்லாது நெருக்கமாகத் தைக்கப்பட்டதும் மரத்தினால் அல்லது லேசில் கரையக்கூடாத அதிகம் தீங்கில்லாத பொருளால் செய்யப்பட வேண்டும்.

4. (a) அப்பக்கடையில் ஒரு குப்பைவாளியும் இரண்டு துப்பல் படிக்கங்களும் கக்கூசாகப் பாவிப்பதற்கு போதிய இடமும் இருக்க வேண்டும்.

(b) அப்பக்கடைகளில் ஐம்பது அடி தூரத்திற்குள் கக்கூசு, குப்பைக்கிடங்கு பயமைகுவியல் அழுக்குத் தண்ணீர் ஓடும் வாய்க்கால்கள் இருக்கக் கூடாது.

(c) அப்பக்கடைக்குள்ளே அல்லது நேர்கிட்டுமானமாய் குப்பைக்கிடங்கு கக்கூசு அல்லது சாம்பர்கிடங்கு இருக்கக்கூடாது.

## III. வது—உத்தரவுப்பத்திரம்பெற்ற இடங்களில் கவனிக்கப்படவேண்டிய பிரமாணங்கள்.

1. அப்பக்கடை வைத்திருக்க உத்தரவுப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் கடைக்குவெளியே ஒரு பலகையில் தன் பெயரையும் உத்தரவுபெற்ற அப்பக்கடை என்றதையும் விளங்கக்கூடிய விதமாய் ஆங்கிலத்திலும் சுயபாஷைகளிலும் எழுதி நன்றாயத் தெரியக்கூடிய விடத்தில் தொங்கவிட வேண்டும்.

2. சுகாதாரசங்கத் தலைவர் அல்லது நியமிக்கப்படுபவர் ஏற்ற வசதியான நேரத்திலும் போய் சோதனை பண்ணக்கூடிய விதமாய் உத்தரவுப் பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் உத்தரவுப் பத்திரத்தையும் அதற்காகிய பிரமாணங்களையும் எவரும் பார்க்கும்படி நன்றாய்த் தெரியக்கூடியவிடத்தில் கண்ணாடியால் மூடித் தொங்கவிட்டிருக்க வேண்டும். அதுவுமன்றி அப்பக்கடையில் வேலைசெய்யும் ஒவ்வொருவருடையவும் அப்பம் எடுத்து விற்போருடையவும் பெயரையும் ஊரையும் குறித்து ஓர் இடாப்பு எழுதி தொங்கவிட வேண்டும்.

3. உத்தரவுபெற்ற ஒவ்வொருவரும் அப்பக்கடை சுவர்களை ஆனிமாதத்தி லொருமுறை, மார்கழிமாதத்தி லொருமுறையாக வருஷத்தில் இருமுறை வெள்ளையடிக்க வேண்டும். மஞ்சப் பலகைகளை வருஷம் நாலுமுறை அதாவது பங்குனி, ஆனி, புரட்டாதி, மார்கழி மாதங்களில, வெள்ளை அடிக்கவேண்டும். ஆனி, மார்கழி மாசங்களில் அல்லது சங்கத்தலைவர் எழுத்துமூலம் குறிக்கப்பட்ட எந்த நேரத்திலும் மரவேலைகளெல்லாம் வெள்ளையடிக்கப்பட அல்லது மை பூசியிருந்தால் வென்னீரால் சவுக்காரம் போட்டுக் கழுவப்படவேண்டும்.

4. உத்தரவுப் பத்திரம் உள்ள ஒவ்வொருவரும் அப்பத்தாரத்தில் குறிக்கப்பட்ட நேரங்களில் அப்பக்கடையின் நிலத்தையும் சுவரில் ஓடுபதித்திருந்த அல்லது சீமேந்து போடப்பட்ட இடங்களையும் மேசைகளையும் கழுவவும்படி செய்யவேண்டும். அப்பக்கடையின் எந்தப் பகுதியையும் சுறறி இருக்கும் இடங்களையும் வாய்க்கால்கள், மேசை கதிரைகள் இன்னுமுள்ள தளபாடங்களையும் நல்ல பழுதில்லாத நிலையில் வைத்திருப்பதோடு அப்பக் கடைகளுக்குக் கிட்டவிருக்கும் வாய்க்கால், கக்கூசு, குப்பைக்கிடங்கு முதலிய விடங்களிலிருந்து கெட்ட நாற்றங்கள் வாராதபடி பார்த்துக்கொள்ளவும் வேண்டும். கடையிலுள்ள குப்பைகள் அழுக்குக் ளெற்லாவற்றையும் ஒரு தகரத்திற்குள் போட்டு மூடிவைத்திருந்து ஒரு நாளைக் கொருதரமாவது அவைகளை எடுக்கும்படி செய்யவேண்டும்: அந்தக் குப்பைத் தகரம் குப்பை உண்மையாகக் போடப்படும் நேரம் தவிர மற்றும் நேரமெல்லாம் மூடப்பட்டிருக்க வேண்டும்.

5. உத்தரவுபெற்ற ஒவ்வொருவரும் அப்பஞ்செய்வதற்கு நல்லதாகவும் சுத்தமானதாகவுமிருக்கும் கோதுமை மா, தண்ணீர, இன்னும் மற்றுஞ் சாமான்களும் சேர்க்க வேண்டும். நிலத்திலிருந்து குறைந்தபட்சம் மூன்றடி உயரமுள்ளதாயிருக்கும் மேடை ஒன்றில் கோதுமை மா வைக்கப்பட வேண்டும். இந்த மேடை எலிகள் வந்து இருக்கக்கூடாத மாதிரியாய் கட்டப்பட வேண்டும். மேடையின் கீழுள்ள இடம் துப்பரவாக வைத்திருக்கப்பட வேண்டும்.

6. உத்தரவுபெற்ற ஒவ்வொருவரும் அப்பக்கடைகளுள் ஒரு குப்பைவாளியும் இரண்டு துப்பல்படிக்கமும் வைத்திருக்க வேண்டும். அப்பம்செய்பவர் இலகுவில் துப்பக்கூடிய விதமாய் படிக்கம் வைக்கப்பட வேண்டும். ஆனால் மா குழைக்கும் அறையில் வைத்திருக்கக் கூடாது.

7. உத்தரவுபெற்ற ஒவ்வொருவரும் அப்பக்கடைக்குள் எலிகள் வாராதபடி வைத்திருக்க வேண்டும். எலிகள் வரும் துவாரங்கண்டவுடனே கண்ணாடித்துண்டுகள் வைத்து சீமேந்தால் அடைத்துவிட வேண்டும்.

8. அப்பக்கடைக்குள்ளே எந்த விதமான சாட்டைக்கொண்டும் எந்த விதமான மிருகங்களையும் பட்சிகளையும் வைத்திருக்கக்கூடாது.

9. துப்புவதற்காக வைக்கப்பட்ட படிக்கத்துக்குள் அல்லாமல் கடையில் வேறெந்த விடத்திலாவது துப்பக்கூடாது.

10. (1) தொற்றக்கூடிய அல்லது அருவருப்பைத் தாக்கூடிய வியாதிகளுள்ளவர்களும் வியாதிகளிலிருந்து வருந்தியவர்களும் அல்லது அப்படி வியாதியாயிருந்தவர்களை பார்த்து மேய்த்தவர்களும் உத்தரவு பெற்ற அப்பக் கடைக்குள் போகவும், அப்பம் செய்யவும் அவைகளை விற்கவும் கூடாது,

(b) உத்தரவுபெற்ற ஒவ்வொருவரும் பத்தாம் பிரமாணத்தின் 1 ம் பிரிவிற் சொல்லியவைகளை அப்பக்கடையில் எவராவது அவமதித்து நடக்கும்படி இடங்கொடுத்தால் குற்றவாளியாவார்.

11. உத்தரவுபெற்ற ஒவ்வொருவரும் அப்பக் கடைக்குள்ளே அப்பம் செய்கிறதற்காகிய சாமான்கள் தவிர வேறு கதிரை மேசைகளும் உடுப்புகளும் படுக்கும பாய்களும் இன்னும் சாமான்கள் ஒன்றும் வைக்கக்கூடாது.

12. உத்தரவுப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் அப்பக்கடையிருக்கும் கட்டடத்தின் ஒரு பகுதியையாவது அல்லது அதே மெத்தையில் கடைக்குக்கிட்ட இருக்கும் வேறெந்த இடத்தையாவது அடிநிலத்திலிருந்து மஞ்சம் வரைக்கும் கடையிலிருந்து பிரிக்கப்பட்டிருந்தாலொழிய யாரும் படுக்கும் இடமாகப் பாவிக்க விடக்கூடாது. அப்படிப் பிரிக்கப்பட்ட அறையின் விஸ்தாரத்தில் பதினைந்தில் ஒரு பகுதி பெருப்பமுள்ள யன்னலும் இருக்கவேண்டும்.

13. அப்பஞ் செய்ய ஏற்படுத்தப்பட்டு நிற்போர் அப்பஞ்செய்யத் தொடங்குமுன் மார்பையும் தேகத்தையும் மூடக்கூடியதாக ஒரு வெள்ளைச்சீலை கட்டி தலையை மூடி ஒரு தலைப்பாகை அல்லது தொப்பிபோட்டு இரு கைகளையும் நன்றாய்க் கழுவிக்கொண்டே அப்பம் செய்யத் தொடங்க வேண்டும்.

14. உத்தரவுப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் அப்பக்கடைகளிலே வேலைசெய்வோருடைய பாவிப்புக்காக சுத்தமான தண்ணீரும் துப்பரவான தவாய்த்தண்டும் நகம் துப்பரவாக்கும தடைப்பமும் சவுக்காரமும் ஆயத்தமாக வைக்கவேண்டும்.

15. உத்தரவுப்பத்திரம் பெற்றவர் அப்பக்கடைகளிலே போதியளவு சுத்தமான குடிதண்ணீர் வைத்திருக்க வேண்டும்.

16. உத்தரவுப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் ஈக்கள் தூசிகள் பூச்சிகள் பிடியாமல் தகுதியாய்ச் செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருக்காத அப்பங்களை விற்கும் பொருட்டு வெளியில் வைத்திருக்கக்கூடாது.

17. உத்தரவுப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் அப்பக்கடைகளிலே சிறு பிள்ளைகளுக்காகச் செய்யப்படும் அப்பமும் சுருள் அப்பமும் விசக்கோத்தும் வேறு இனிப்புச் சாமான்களும் தவிர மற்றெல்லா அப்பங்களிலும் கால் இருத்தல், அரை இருத்தல், ஒரு இருத்தல், இரண்டு இருத்தல் அல்லது நாலு இருத்தல் என்று எழுத்தினால் அவைகளின் நிறையை வரையச்செய்யப்பட வேண்டும் மேற்சொல்லப்பட்ட சுருள் அப்பம் விசக்கோத்து முதலியனவைத் தவிர மற்ற சாமான்களில் நிறை வரையப்படாமல் அல்லது வரையப்பட்டிருக்கும் நிறைக்குக் குறைந்திருக்கும் சாமான்களை விற்பனைசெய்யக் கூடாது.

18. அப்பம் வாங்குவோர் அவைகளை நிறுக்கும்படி விரும்பினால் அவர்கள் இலகுவில் நிறுத்துக்கொடுக்கும்படி ஒரு தாராசும் தட்டுகளும் முத்திரை குத்திய படிகளும் உத்தரவுப்பத்திரம்பெற்ற ஒவ்வொருவரும் அப்பக்கடைகளிலே பிரத்தியக்ஷமாக வெளியில் வைத்திருக்கவேண்டும்.

19. அப்பக்கடையிலிருந்து அப்பம் எடுத்து விற்கக் கொண்டுபோகும் ஆட்கள் சுகாதாரசங்கத் தலைவரிடத்திலும் உத்தரவுப்பத்திரம் பெற்றவரிடத்திலும் கை எழுத்திட்டு ஒருகடுதாசித் துண்டு வைத்திருந்தா லல்லாமல் விற்கிறதற்காகக் கடையிலிருந்து அப்பம் எடுக்க உத்தரவுப்பத்திரம் பெற்றவர் விடக்கூடாது.

20. அப்பங்களை விற்பனவுக்குக் கொண்டுபோகும்போது மூடிக்கட்டிய வண்டிக்குள் அல்லது மூடியுள்ள கூடைக்குள் அல்லது ஒரு மூடியுள்ள தகரத்திற்குள் அல்லாமல் வேறெந்தப் பாத்திரத்திலும் உத்தரவுப்பத்திலும் உத்தரவுப்பத்திரம் பெற்றவர் கொண்டுபோக விடக்கூடாது அப்படி அப்பங்களைக்கொண்டுபோகுமுன் வண்டிகளையும் கூடைகளையும் தகரங்களையும் உத்தரவுப்பத்திரம்பெற்றவர் பார்த்து துப்பரவாய் இருக்கின்றன என்று கண்டு பின்னரே அப்பங்களைக்கொண்டுபோக விடவேண்டும்.

C.—சாப்பாட்டுக் கடைகளும் தேத்தண்ணீர் கோப்பிக் கடைகளும்.

25. சாப்பாட்டுக் கடை அல்லது தேத்தண்ணீர்க் கடை அல்லது கோப்பிக் கடை வைத்திருக்க லைசென்ஸ் பெற்றவர் அச்சாப்பாட்டுக் கடையை அல்லது தேத்தண்ணீர்க் கடையை அல்லது கோப்பிக் கடையை அக்கிராசனர் திருப்திப்படுக்கொள்ளத்தக்கதாய் துப்புரவாய், சுத்தத்துக்கேற்ற நிலையிலும் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

26. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர், எந்தச் சாப்பாட்டுக் கடையிலேனும், தேத்தண்ணீர்க் கடை அல்லது கோப்பிக் கடையிலேனுமுள்ள அல்லது அங்கே பாவிக்கப்படும் சகல பாத்திரங்களும், வீட்டுச் சாமான்களும், மற்றும் அங்கே பாவிக்கப்படும் சாமான்களும் எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்கப்படும்படி செய்தல் வேண்டும்.

27. தொற்று நோய் அல்லது பரவும் நோய் உடையவரெவரும் அல்லது லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் அல்லது சாப்பாட்டுக் கடையின் அல்லது தேத்தண்ணீர் கடை அல்லது கோப்பிக் கடையின் பொறுப்பேற்றிருப்பவர் அறிந்தமட்டுக்கு, கொஞ்சக் காலத்துக்குமுன் தொற்று நோய் அல்லது பரம்பும் நோய் உடையவரா யிருந்தவர், அல்லது அவ்வித நோய் பிடித்திருந்தவரெவரையும் கொஞ்சக் காலத்துக்குமுன் பராமரித்தவர் எவரையும் லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் அல்லது சாப்பாட்டுக் கடையின் அல்லது தேத்தண்ணீர்க் கடை அல்லது கோப்பிக் கடையின் பொறுப்பேற்றிருப்பவர் அச்சாப்பாட்டுக்கடை, அல்லது தேத்தண்ணீர்க்கடை அல்லது கோப்பிக்கடையின் அல்லது அதற்குச் சமீபத்தில் வேலையிலேற்பட விடப்படாது.

28. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் அவ்விடத்திற் பாவிக்கப்படும் சீனியை அகன்ற வாயுள்ளனவும் கண்ணாடி வாய்மூடிகளால் அடைக்கப்பட்டவைகளுமான போத்தல்களில் வைத்திருக்கப்படும்படி செய்தல் வேண்டும்.

29. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் விற்பனவுக்கென்று வெளியாக வைக்கப்பட்ட எல்லாப் பலகாரங்களையும், இனிப்புப் பண்டங்களையும் ஈ, இலையான் போகாதபடி நன்றாகச் செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருக்கப்படும்படியும் அக்கண்ணாடிப் பெட்டிகள் மிகச் சுத்தமாக வைத்திருக்கப்படும்படியும் செய்தல் வேண்டும். மற்றும் போசன பதார்த்தங்களிலும் ஈக்கள் விழுந்து அசுசிப்படாவண்ணம் அவைகளையும் அப்பிரகாரமே அவர் மூடிவைப்பித்தல் வேண்டும்.

30. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் தேயிலைச் சக்கை கோப்பிச் சக்கை அல்லது மிஞ்சிய பால் அல்லது மிஞ்சிய போசனம் அழுக்குகளைக் ஒப்பைகள் யாவையும் ஓர் சரியான குப்பை வாளியில் சேர்த்து வைக்கும்படியும் ஒவ்வொரு நாளும் அகற்றிவிடப்படும்படியும் செய்தல் வேண்டும்.

31. எந்தச் சாப்பாட்டுக் கடையிலாவது அல்லது தேயிலைக்கடை கோப்பிக் கடையிலாவது எவரும் கலப்பான பாலை விற்கவேனும், விலைக்கு வாங்கும்படி கேட்கவேனும், விற்பனவுக்காக வெளியாக வைக்கவேனும், வைத்திருக்கவேனும் படாது.

32. இந்த விதானத்தின் நோக்கங்களின் பொருட்டு "கலந்த பாலென்பது" தண்ணீர் அல்லது வேறு புறநீர்ப்பதார்த்த மெதுவும் சேர்த்தால் சுத்தக் குறைவானதாய்ப்போன பால் எனப் பொருள்படும்.

33. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் அச்சாப்பாட்டுக் கடை அல்லது தேத்தண்ணீர்க்கடை கோப்பிக்கடை ஒவ்வொன்றிலும் இவ்வுபவிதிகள் எழுதியுள்ள பிரதியொன்று மட்டையிடப்பட்டு யாவரும் காணக்கூடிய ஓரிடத்தில் தூக்கிவிடப்பட வேண்டும்.

D.—இறைச்சிக் கடைகள்.

34. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் இறைச்சி வைத்திருக்கும் ஒவ்வொரு அறையும் முதற் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படி செய்தல் வேண்டும்.

35. லைசென்ஸ் உத்தரவுப்பெற்றவர் இறைச்சிக்கடைக்குள் பாவிக்கப்படும் ஒவ்வோரு மேசையும் துத்தநாகத் தகட்டினால் அல்லது வேறு திண் இல்லாததும் நீர் ஊடாகச் செல்லக்கூடாததுமான வேறெந்தப் பொருளாலும் மூடப்பட்டதாயும் இருக்கச் செய்வதுமன்றி அம்மேசைகளும் இறைச்சி கொத்தும் கட்டையும் எல்லாக் கருவிகளும் மிகத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படியும் செய்தல் வேண்டும்.

36. லைசென்ஸ உத்தரவுப்பத்திரம் பெற்றவர், கடைக்குள் உள்ள மேசையையும் இறைச்சிவெட்டும் கட்டையையும் மற்றைய ஆயுதங்களையும் அவைகளின் பாவிப்பு முடிந்தவுடனே தண்ணீரால் அவைகளை நன்றாகக் கழுவுவித்துத் துப்பரவான துடைப்பத்தினால் உரஞ்சித் துடைப்பிக்க வேண்டும். இறைச்சி தூக்கும் கொளுக்கிகளை நன்றாகக் கறள் இல்லாதபடி மினுக்கி வைத்திருக்கும்படியும், செய்யவேண்டும்.

37. லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் பெற்றவர் எல்லா மிச்சங்களையும் விலைப்படாத சாமானெதையும் கழிவு மாமிசத்தையும் இவைகள் உடனே எடுத்துக் கொண்டுபோகப்படாவிட்டால் துத்தநாகம் உள்ளே அடைக்கப்பட்டு, ஈக்கள் அதற்குள் போகாதபடியான சிறு துவாரங்கள் வைக்கப்பட்ட ஓர் மூடி உடையதான ஓர் பெட்டியில் போட்டு வைக்கப்படும்படி செய்தல் வேண்டும்.

38. லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் பெற்றவர் அல்லது இறைச்சிக்கடையின் பொறுப்பேற்றிருக்குமெவரும் எத்தொற்றுநோயேனும் பரம்பும்நோயேனும் உடைய அல்லது லைசென்ஸ் பத்திரம் பெற்றவர் அல்லது இறைச்சிக்கடையின் பொறுப்பேற்றிருக்கும் எவரும் அறிந்தமட்டுக்கு கொஞ்சக்காலத்துக்குமுன் அவ்வித நோயெதுவும் உடையவராயிருந்த அல்லது கொஞ்சக்காலத்துக்கு முன் அவ்வித் நோய்ப்பட்டிருந்த எவரையும் கொஞ்சக்காலத்துக்கு முன் பராமரித்துவந்த எவரும் அவ்விறைச்சிக்கடையில் வேலையில் ஏற்பட விடப்படாது.

39. ஒவ்வொரு இறைச்சிக்காரனும் குப்பை போட்டுவைப்பதற்கு, எடுத்துக்கொண்டு போகக்கூடிய தகரவாளியை அல்லது வேறு எந்த லோகத்திலாவது செய்யப்பட்ட குப்பைவாளியைக் கடையில் வைக்கவேண்டும்.

40. ஒவ்வொரு இறைச்சிக்கடையும் அங்கே நடக்கும் வேலையும் மேல்விசாரணையும் எல்லா நேரங்களிலும் சௌக்கியாதாரசங்க அக்கிராசனரால் அல்லது அவரிடமிருந்து முறைமையாக அதிகாரம்பெற்ற எவராலும் பரிசோதிக்கப்படுவதற்கு இடமாயும், உட்பட்டும் இருத்தல் வேண்டும்.

41. லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் பெற்றவர், இறைச்சிக்கடையில் இந்த உபவிதிகள் உள்ள பிரதியொன்றை மட்டைபோட்டு எவரும் இலகுவில் பார்க்கக்கூடிய இடத்தில், தூக்கிவைத்தல் வேண்டும்.

E.—காலைகள்.

42. லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு காலையும் அக்கிராசனரால் பதிவுசெய்யப்பட வேண்டும். மேலும் உத்தரவுப்பத்திரம் பெற்றவர் அக்காலை ஒவ்வொன்றின் வாசலிலும் பதிவுசெய்யப்பட்ட காலை இலக்கம் ——— என்ற சொற்களும் சொந்தக்காரனின் பெயரும் எழுதியுள்ள ஓர் விளம்பரப் பலகையைத் தூக்கிவைத்தல் வேண்டும்.

43. உத்தரவுப்பத்திரம் பெற்றவர் ஒவ்வொரு காலையையும் அல்லது வண்டிகள் மாடுகள் தங்குமிடத்தையும் சரிபானபடி மட்டப்படுத்தியும், போதிய கான்கள் கட்டியும் இருக்கும்படி செய்யவேண்டும். நிலத்தின் மேற்பரப்பு கடுமையானதாயும் மட்டமாயும் இருக்கும்படி அதற்குச் சல்லிக்கல்லு ஏன் சரியாய்ப் பதித்து இறுக்கப்படும்படி செய்தல்வேண்டும். காலையை அல்லது தங்குமிடத்தைத் தினமும் மிகவும் நன்றாய்த் துப்பரவுபண்ணுவித்து அது சுத்தமாயும் சுகாதாரத்துக் கேற்றமாதிரியும் வைத்திருக்கப்படும்படியும் சாணமும் கழிவுகளும் மனுஷர் குடியிருக்கும் எந்த வீட்டிலிருந்தும் 50 யார் தூரத்தி

னுள்ள ஓரிடத்துக்கு ஒவ்வொரு நாளும் கொண்டுபோகப்படும்படியும் செய்தல்வேண்டும். மேலும், எல்லாவிதமான சாமான்களும் பொருட்களும் பண்டங்களும் அக்காலையை மேற்சொல்லிய வண்ணம் ஒவ்வொரு நாளும் துப்பரவுபண்ணுகிறதற்கு இடைஞ்சலா யிராதபடி அதில் வைக்கப்படும்படியும் அவர் செய்தல் வேண்டும்.

44. உத்தரவுப்பத்திரம் பெற்றவர் ஒவ்வொரு லாயமும், மாட்டுக்கொட்டிலும் மாடுகள் தங்குமிடமும் சுகாதாரத்திற்கு ஏற்றவிதமாய் இருக்கும் படியும் ஒவ்வொரு நாளும் நன்றாய்க் கழுவி சுத்தமாய் வைத்திருக்கும்படியும் சனங்கள் குடியிருக்கும் எந்த வீட்டிலிருந்தும் ஐம்பது யாருக்கப்பால் உள்ள இடத்திலே சாணமும் குப்பையும் தினமும் கொண்டுபோய்க் கொட்டும்படியும் செய்தல் வேண்டும்.

45. ஒவ்வொரு காலையும் நியாயமான எல்லா வேளைகளிலும் சங்கத்தில் உத்தியோகஸ்தர்களாலேனும் அக்கிராசனரால் எழுத்துமூலம் அதிகாரம் கொடுக்கப்பட்ட வேறு எவராலும் சோதிக்கப்படுவதற்கு இடமானதா யிருத்தல் வேண்டும். இந்த உபவிதிகளின்படி அக்கிராசனர் உண்டாக்கக் கூடிய எல்லாக் கட்டளைகளும் எழுத்துமூலமாய் இருத்தல் வேண்டும்.

## E.—பொது விதிகள்.

46. சௌக்கியாதாரசங்க பட்டணத்தின் எல்லைக்குள் எவராவது வருஷாவருஷம் சௌக்கியாதாரசங்க அக்கிராசனரால் கொடுக்கப்படும் உத்தரவுப் பத்திரம் இல்லாமல் எந்த அப்பக்கடையையாவது, சாப்பாட்டுக்கடையையாவது, தேயிலைக் கோப்பிக் கடைகளையாவது, மாட்டுக்காலையையாவது வைத்திருக்கப்படாது. மேற்சொல்லிய விதானங்களி லெதின்படியும் செய்யத்தவறும் எவருக்கும் அவ்வுத்தரவுப்பத்திரத்தைக் கொடாது மறுப்பதற்கு அக்கிராசனருக்கு இதனுல் அதிகாரம் கொடுக்கப்படுகின்றது. அவ்வுத்தரவுப்பத்திரங்க ளொவ்வொன்றும் அவைகள் எந்த வருஷத்துக்கென்று கொடுக்கப்பட்டனவோ அந்த வருஷத்தின் மார்கழி மாதம் 31 ந் தேதி வரையிலும் அல்லது உத்தரவுப்பத்திரம் அழித்துவிடப்படும் வரையிலும் பெலப்புடையதா யிருத்தல் வேண்டும். மேலும், அதிகாரமந்திர சபையோடுகூடிய தேசாதிபதி யவர்களின் அனுமதியோடு சௌக்கியாதாரசங்கம் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கும் வேதனங்களுக்கும் அவ்வுத்தரவுப்பத்திரம் உட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

47. மேற்சொல்லிய விதானம் எதையும் மீறினதற்காக எவரும் இருமுறை அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் எக்கோட்டாராலேனும் குற்றப்படுத்தப்பட் டிருக்குமிடத்து, மேற்சொல்லியபடி இரண்டாம் அல்லது பிந்திய முறைகளில் அவ்விதம் அபராதஸ்தாபன மெழுதும் கோட்டார் மேற்சொல்லியவருக்கு சௌக்கியாதாரசங்க அக்கிராசனரால் இந்த அதிகாரத்தின்படி கொடுக்கப்பட்ட லைசென்ஸ் உத்தரவுப்பத்திரத்தை அழித்துவிடுவது அக்கோட்டாருக்கு நியாயமுறையாகும். கோட்டாரால் ஓர் லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் மேற்சொல்லியபடி அழித்துவிடப்பட்டதின்மேல் மேற்சொல்லியவருக்கு ஓர் புதிய லைசென்ஸ் உத்தரவுப்பத்திரத்தைத் தம் நற்கருத்தின்படி கொடுக்க மறுப்பதற்கு சௌக்கியாதாரசங்க அக்கிராசனருக்கு அதிகாரமுண்டு. ஆயின், எந்தப் பொதுச் சங்கத்தினுலும் ஸ்தாபிக்கப்பட்ட அல்லது எந்தப் பொதுச்சங்கத்தின் பொறுப்பிலும் வைக்கப்பட்ட சந்தைக் கடைகளுக்கு இந்த விதானங்கள் ஏற்புடையனவாகா

## 9 E (2) (F) ம் பிரிவு.

### அருவருப்புண்டாக்கக்கூடிய தொழில்கள்.

1. இந்த விதானத்தின் நோக்கத்தின்பொருட்டு அபாயமாக அல்லது அருவருப் புண்டாக்கக்கூடிய தொழில்கள் பின்வருவனவற்றில் எதுவும் எனப் பொருள்படுவதுமன்றி அவைகளி லெதையும் உளப்படுத்தும்

2, செயற்கைப் பயளை உண்டாக்கல் அல்லது சேர்த்துவைத்தல், இரத்தம் அல்லது கழிவுமாமிசத்தை அவித்தல், இரத்தம் அல்லது கழிவுமாமிசம் உலர்த்துதல் தோல் பதனிடுதல், கொழுப்புருக்குதல், கொழுப்பு வடித்தல், சவுககாரம் செய்தல், தென்ன மட்டை ஊறவைத்தல், தும்புக்குச் சாயமிடல், யந்திரத்தைக் கொண்டு தேங்காயெண்ணெ வடித்தல், தும்பு ஆக்குதல் அல்லது சேர்த்து வைத்தல், தோல்கள், எலும்புகள் செய்கைப்பயளைகள். அல்லது செய்கைப் பயளையை உண்டாக்குவதற்கான பொருட்கள், சேர்த்து வைத்தல், ஐந்து அத்தர் நீறைக்கு மேற்பட கருவாடு சேர்த்து வைத்தல், செங்கற்களும் ஓடுகளும் செய்தல், சூளை வைத்தல்; மீனுக்கு ஐலக்கட்டியிடுதல் அல்லது உப்பிட்டுக் காயவைத்தல், சோடா லெமனட் முதலிய பானங்கள் செய்தல் அல்லது மின்னரம் சேகரித்தல் அல்லது சுத்தப்படுத்தல் ஆகிய இவைகளாம்.

3. சௌக்கியாதார சங்க எல்லைக்குள் உள்ள எக்காணியிலேனும் வளவிலேனும் இருக்கும் எவராவது அக்காணியின் அல்லது வளவின் சொந்தக்காரனாவது வேறெவராவது சௌக்கியாதார சங்க அக்கிராசனரிடம் பெற்றுக்கொண்ட ஓர் லைசென்ஸ் உத்தரவுப் பத்திரமின்றி அக்காணி அல்லது வளவெதிலும் அருவருப்புண்டாக்கக்கூடிய அல்லது அபாயமான வேலை அல்லது கைத்தொழி லெதையும் நடத்தவேனும் நடத்த இடங் கொடுக்கவேனும் படாது. இவ்விதான மெதின்படியும் செய்யத்தவறும் எவருக்கும் அவ்வுத்தரவுப் பத்திரத்தைக் கொடுக்க மறுப்பதற்கு அவ்வக்கிராசனருக்கு அதிகாரங் கொடுக்கப்படுகின்றது. அவ்வுத்தரவுப் பத்திரங்கள அதிகார மந்திர சபையோடு கூடிய உத்தம தேசாதிபதியவர்களின் அனுமதியோடுசௌக்கியாதார சங்கம் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கும் வேதனங்களுக்குட்பட்டதா யிருத்தல் வேண்டும்.

4. மேற் சொல்லிய விதானங்களின் எதையும் மீறினதற்காக எக்கோட்டாராலேனும் எவரும் இருமுறை அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் குற்றப்படுத்தப்பட்டிருக்குமிடத்து மேற்சொல்லியபடி இரண்டாம் அல்லது பிந்திய முறை அபராதஸ்தாபன மெழுதும் கோட்டார் மேற்சொல்லியவருக்கு இந்த அதிகாரத்தின்படி சௌக்கியாதாரசங்க அக்கிராசனாற் கொடுக்கப்பட்ட லைசென்ஸ் உத்தரவுப் பத்திரத்தை அழித்துவிடுவது அக்கோட்டாருக்கு நியாயமுறையாகும் ஓர் கோட்டாரால் ஓர் லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் மேற்சொல்லியபடி அழித்து விடப்பட்டதின் மேல் மேற்சொல்லியவருக்கு ஓர் புதிய லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் தம் நற்கருத்தின்படி கொடுக்க மறுப்பதற்கு சௌக்கியாதார சங்க அக்கிராசனருக்கு அதிகாரமுண்டு.

5. லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் பெற்றவர் மேற்சொல்லப்பட்ட வியாபாரங்களையோ தொழில்களையோ அல்லது கைத்தொழில்களையோ நடத்துவதற்காக வேண்டிய பொருட்களை துர்க்கந்தம் வீசாதபடியும் அருவருப்பைக் கொடுக்காதபடியும் வைத்திருக்கும்படி செய்யவேண்டும். இன்னும் அச்சாமான்களை பிரசித்த தெரு மார்க்கமாய் கொண்டுமோகவேண்டுமானுல், அவைகள் துர்க்கந்தம் வீசி அருவருப்பைக் கொடுக்கக்கூடியவைகளாயிருக்குமாகில் வைத்து அவைகளை நீர் உறிஞ்சாத மூடிய பத்திரங்களில் அல்லது யாதும் அசங்கியம் வாராதபடி தடுக்கக்கூடிய பிரகாரமாய்க் கொண்டுபோகப்படும்படி செய்தல் வேண்டும்.

6. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் கைத்தொழில் வேலை எதுவும நடக்கும் வேளையில் வெளியேவரும் அருவருப்புண்டாக்கக்கூடிய ஆவி அல்லது வாயு எதையும் தீங்கில்லாததாக்கும்படி செய்யவேண்டிய எல்லாத் திறமையான வழிவகைகளையும் செய்விக்க வேண்டுவதுமன்றி, அவ் ஆவிகளும் வாயுக்களும், அவைகளால் யாதும் தீங்கு அல்லது அருவருப்பு உண்டாகாதபடி, காற்றுட்செறிந்த விடத்தக்கதாக ஓர் போதிய உயரத்தில் அவைகளை வெளிக்காற்றுட் செல்லச்செய்தல் வேண்டும், அல்லது நெருப்புக்கூடாக அல்லது ஓர் கனிகாணி யந்திரத்துக்கூடாக நேரே செல்லச்செய்தல் வேண்டும். மேலும், அவர், வளவு முழுவதிலும் போதிய கான்கள் வைக்கப்படும்படியும் அக்கான்கள் நல் நிலையிலிருக்கும்படியும் ஒவ்வொரு நாளும் கழுவப்படும்படியும் செய்தல் வேண்டும்.

7. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் தளங்கள் எப்பொழுதும் பழுதுகளில்லாமல் வைத்திருக்கப்படும்படியும் ஒவ்வொரு நாளும் துப்பரவாக்கப்படும்படியும் செய்வது மன்றி அக்கிராசனராற் கேட்கப்படும் போது அவைகளை ஓர் தகுந்த ஊறுத பொருளால் செய்து வைக்கவும் வேண்டும்.

8. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரப் பெற்றவர் சுவர்களில் அழுக்கு படியாதபடி அவைகள் நன்றாய் வைத்திருக்கும்படியும் குறைந்த பட்சம் வருஷத்துக்கிருமுறையாகுதல் (அதாவது ஆனி மார்கழி என்னும் இம்மாசங்களில்) வெள்ளையடிப்பிக்கப்படும்படியும் சௌக்கியாதார சங்க அக்கிராசனரால் அல்லது சௌக்கியாதார சிரேஷ்ட உத்தியோகஸ்தரால் கேட்கப்படும்போது வேறெந்த வேளைகளிலும் வெள்ளை யடிப்பிக்கப்படும்படியும் செய்தல் வேண்டும்.

9. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் கருவிகளும் பாத்திரங்களு முட்படச் சகல யந்திரங்களும் சுத்தமாக வைத்திருக்கப்படும்படியும் கூடுமானுல் ஒவ்வொரு நாளும் சுத்தப்படுத்தப்படும்படியும் செய்தல் வேண்டும்.

10. லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் பெற்றவர், தொழிற் சாலையிலுள்ள கூளம், குப்பை, அரிவு துண்கள், இன்னும் கழிவுகள் கைதொழிற் செய்கை இடை விளைவுகள் முதலியவைகளை அவைகள் அவ்விடத்தில் வியாபார முயற்சிக்கு இன்னும் உடனே உபயோகிக்கப்படுவதற்காக வைத்திருக்கப்படவேண்டியவைகளா யிருந்தாலன்றி மற்றப்படிக்குமூடப்பட்ட பாத்திரங்களிலிட்டு அவ்விடத்திலிருந்து ஒவ்வொரு நாளும் கொண்டு போகப்படும்படி செய்தல்வேண்டும்.

11. லைசென்ஸ் உத்தரவுப் பத்திரம் பெற்றவர் தோல்கள் அல்லது வேறு பொருட்கள் கழுவுவதற்காகவும், ஊறப்போடுவதற்காகவும் பாவிக்கப்படும் தொட்டிகளிலுள்ள தண்ணீரை அகற்றி அவைகளிலிருந்து கெட்ட நாற்றம் வீசாது தடுப்பதற்கு வேண்டிய எத்தனை முறைகளிலும் அவைகளைக் கழிவு வித்தல் வேண்டும்.

12. அருவருப்புண்டாக்கக்கூடிய வியாபரமேனும் கைத்தொழிலேனும் நடத்துமெவரும் அவ்வித அருவருப்புண்டாக்கக்கூடிய வியாபாரம் அல்லது கைத்தொழில் நடத்தப்படும் காணியின் அல்லது வளவின் சொந்தக்காரனேனும் அதிற் குடியிருப்பவனேனும் எந்த ஆற்றிலேனும் நீரோட்டத்திலேனும் நீர்க்காலிலேனுல், வெட்டாற்றிலேனும், கிணற்றிலேனும், குளத்திலேனும், தண்ணீர் நிற்கும் வெளியான எவ்விடத்திலேனும், அழுக்கான துர்க்கந்தம் வீசும் அல்லது அருவருப்பையுண்டாக்கக்கூடிய தண்ணீரை அல்லது வேறு நீர்ப்பதார்த்தத்தை அதற்குள் ஓடச் செய்வதினால் அல்லது ஓடவிடுவதினால், அல்லது எந்த அருவருப்புண்டாக்கக்கூடிய வஸ்துவையும் அதற்குள் எறிவதினால் அல்லது அதற்குள் அள்ளுண்டுப்போக விடுவதினால் அசுசிப்படுத்தப்படாது. மேலும் அவர் அவ் ஆற்றை நீரோட்டத்தை வெட்டாற்றை நீர்க்காலை, கிணற்றை, குளத்தை அல்லது தண்ணீர் நிற்கும் இடத்தை வேறெவ்விதத்திலேனும் அசுசிப்படுத்தவாவது கெடுக்கவாவது படாது.

13. மேற்சொல்லப்பட்ட தொழில்கள் யாவும் நடத்தப்படும் இடங்களை நியாயமான எல்லா வேளைகளிலும் பரிசோதிப்பது சௌக்கியாதார சங்க அக்கிராசனருக்கேனும் அக்கிராசனரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட எவருக்கேனும் நியாயமுறையாகும்.

14. செங்கற்கல் அல்லது ஓடுகள் செய்வதற்காக அல்லது வேறு நோக்கத்திற்காக களிமண், மண், கற்கள், பரல் கபுக்கற்கள் அல்லது வேறு பொருட்கள் வெட்டியெடுக்கப்படும் காணியின் சொந்தக்காரன் அல்லது அதிற் குடியிருப்போன் அதில் தண்ணீர் நில்லாது ஓடுவதற்காகப்போதிய கான்கள் கட்டியிருப்பதற்கும் அங்கே வெட்டியிருக்கும் குழிகள் அல்லது அகழ்கள் அவைகளில் தண்ணீர் தங்கி நில்லாதபடி மறுபடி நிரப்பப்பட்டிருப்பதற்கும் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

15. சௌக்கியாதார சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடத்திலல்லது இடங்களிலல்லாது வேறு எவ்விடத்திலேனும் எவராவது மீன் காய்வதற்காக வைக்க அல்லது பரவி விடப்படாது.

### சோடாலெமனேட் செய்தல்.

16. சௌக்கியாதார சங்க அக்கிராசனருக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக எழுத்துமூலமாய் அறிவிக்காதபடி எவராவது சௌக்கியாதார சங்க எல்லைக்குள் சோடா லெமனேட் முதலிய பானங்களை விற்பனவுக்காகச் செய்யப்படாது. பின்வருமாறு காரியங்கள் இருந்தாலன்றி எவராவது சோடா லெமனேட் முதலிய பானங்களைச் செய்யப்படாது.

(*a*) காலை, குதிரைலாயம் அல்லது எந்த மிருகங்களும் இரவிலும் பகலிலும் நிற்பதற்காகப் பாவிக்கப்படும் கட்டடம் அல்லது மலகூடம் அல்லதுமலக்குழி ஆகிய இடங்களிலிருந்து 150 அடி தூரத்திற் கப்பால் சோடா லெமனேட் முதலிய பானங்கள் செய்யுமிடம் இருத்தல் வேண்டும்.

(*b*) சோடா லெமனேட் முதலிய பானங்கள் செய்யப்படும் இடங்கள் போதிய வெளிச்சம் வரக்கூடியதாயும், காற்று வரக்கூடியதாயும், மச்சுப் பலகை அடிக்கப்பட்டதாயும், அழுக்குகளைக் கழுவிவிடக் கூடியவிதமாய் வாய்க்கால் கட்டப்பட்டதாயும் அழுக்கும் தூசியும் இல்லாது சுத்தமாய் அவ்விடம் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(*c*) சோடா லெமனேட் முதலிய பானங்கள் செய்வதற்காகப் பாவிக்கப்படும் தண்ணீர் அசுசிப்படுத்தப்படாதபடி போதிய பிரகாரம் பாதுகாக்கப்பட்டு சௌக்கியாதார சங்க அக்கிராசனரால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் இடத்தில் இருந்து எடுக்கப்பட்டும், தண்ணீரை சோடா லெமனேட் செய்யப்படும் சாலைக்கும் கொண்டுவரும் வழியில் அது அசுசிப்படாதபடி கொண்டுவரப்பட்டும், சோடா லெமனேட் பானங்கள் செய்வதற்கான யந்திரத்தோடு சேர்க்கப்பட்டு தூசி போகாதபடி இறுக்கமாய் வைக்கப்பட்டிருக்கும் மூடிகளுள்ள கெட்டியான தொட்டிகளில் அல்லது ஜலாதாரங்களில் சேர்த்து வைக்கப்பட்டும் இருத்தல் வேண்டும்.

17: லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் பெற்றவர் சோடா லெமனேட் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் தண்ணீரை "யூவேல்" வடிக்குள்ளாக அல்லது அக்கிராசனரால் அங்கீகரிக்கப்பட்ட வேறு வடிக்குள்ளால் வடிக்கும்படி செய்யவேண்டும். அப்படிப்பட்ட வடிகள் குத்திரங்களோடு தொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆயினும், அங்கீகரிக்கப்பட்ட ஓர் பொது இடத்திலிருந்து கொண்டுவரப்படும் தண்ணீரின் விஷயத்தில் இவ்விதானம் கைக்கொள்ளப்பட வேண்டியதில்லையென்று விலக்கிவைப்பதற்கு அக்கிராசனருக்கு அதிகாரமுண்டு.

18. சோடா லெமனேட் செய்யும் சாலையிலுள்ள போத்தல்களும் மற்றும் சாமான்களும் கழுவுவதற்காகப் பாவிக்கப்படும் தண்ணீர் சௌக்கியாதாரச் சங்க அக்கிராசனர் அல்லது சுகாதார வைத்திய உத்தியோகஸ்தர் எடுத்துப் பாவிக்கலாமென்று உத்தரவுகொடுத்த இடத்திலிருந்து எடுக்கப்பட வேண்டும்.

19. லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் பெற்றவர் சோடா லெமனேட் முதலிய பானங்கள் விற்பதற்கு வைத்திருக்கும் ஒவ்வொரு போத்தலிலும் அப்போத்தலில் விட்டு அடைக்கப்பட்டிருக்கும் பானத்தைக் குறித்த விவரமும், அப்பானம் செய்த விடத்தின் பெயரும், சோடா லெமனேட் சாலையை உடையவரின் அல்லது சமுதாயத்தாரின் பெயரும், அச்சோடா லெமனேட் சாலைக்கு சங்க அக்கிராசனரால் குறித்து விடப்பட்ட இலக்கமும் விபரமாய்க் காட்டும் ஓர் சீட்டு ஒட்டப்பட்டிருக்கச் செய்தல் வேண்டும்.

20. உத்தரவுப்பத்திரம் பெற்றவர், சோடா லெமனேட் செய்யப்படும் தலத்தில் சொறி, சிரங்கு, தேமல் அல்லது தொற்றுநோய்களுள்ளவர்களையும் பன்னிரண்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களையும் வேலைக்காக ஏற்படுத்தப்படாது.

21. லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் பெற்றவர் போத்தல்களில் வாயுவிட்டு அடைக்கும் வேலைசெய்யும் எல்லா வேலைக்காரரும் முகத்திற்கும் கழுத்திற்கும் சிறு கண்களுள்ள மெல்லிய கம்பிவலைக் காப்புக்களும்; கைகளுக்கு தோற் கைமேசுகளும் போட்டிருக்கச்செய்தல் வேண்டும்.

22. லைசென்ஸ் உத்தரவுப்பத்திரம் பெற்றவர் சர்வத்துகள் ஈ இலையான் போகாதபடி செய்யப்பட்ட ஓர் புறம்பான அறையில் செய்யப்படும் படியும் அவைகள் செய்வதற்காகப் பாவிக்கப்படும் எல்லா மருந்து வஸ்துக்களும் மற்றும் சாமான்களும் திறமானவைகளாயிருக்கவும் அவைகளைச் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் எல்லா யந்திரங்களும், பாண்டங்களும் மிகத் துப்புரவாய் வைத்திருக்கப்படும்படியும் செய்தல் வேண்டும்

23. சோடா லெமனேட் செய்யும் சாலையில் எப்பகுதியையேனும் எவரும் குடியிருப்பதற்காகப் பாவிக்கப்படாது.

### 9 ம் E (2) (*i*) ம் பிரிவு.

### பாழ் நிலங்களையும் பொது நிலங்களையும் பாதுகாத்தல்.

அக்கிராசனரின் உத்தரவின்றி எவரும் பாழ் நிலங்களில் அல்லது பொது நிலங்களிலிருந்து மாட்டுச்சாணி, மணல், மண், கல்லு, வளரும் பூண்டுகள் அல்லது மரங்கள் கொண்டுபோகவேனும் எவ்விதத்திலாவது அவைகளின் மேற்பரப்பை மாற்றவேனும், வேறுபடுத்தவேனும்படாது.

### 9 E (2) (*j*) ம் பிரிவு.

### எல்லை வேலிகள் முதலானவைகள் போடுதலும் அவைகளைப் பத்திரப்படுத்தலும்.

பட்டணத்திலுள்ள ஒவ்வோரு வீட்டின் தோட்டத்தின் கட்டடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரனும் அல்லது அதிற் குடியிருப்பவனும் அவ்வீட்டை, தோட்டத்தை, கட்டடத்தை அல்லது காணியைச்சுற்றி நிலமட்டத்திலிருந்து மூன்று அடிக்குக் குறையாமலும் ஐந்து அடிக்குக் கூடாமலும் உயரமுள்ள ஒரு சுவரை அல்லது வேலியை நாட்டவேண்டும்.

### 9 E (2) (*m*) ம் பிரிவு.

### நாய்கள்.

அலைந்துதிரியும் எல்லா நாய்களையும் பிடிக்கும்படியும் அவைகள் நோயுள்ளவைகளாயிருந்தால் அல்லது அவைகள் நோயுள்ளவைகளென்று சமுசயமிருந்தால் அவைகளைக் கொன்றுவிடவும் அல்லது சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ஓர் பட்டியில் அடைத்துவைத்து அப்படி அடைத்துவைத்திருக்கும் முதலாம் நாளுக்கு நாற்பது சதமும் அதற்குப் பிந்திய நாட்களுக்கு நாளொன்றுக்கு 15 சத வீதமாகவும் சௌக்கியாதார சங்கத்தாரால் செலவழிக்கப்பட்ட செலவுகளின் பொருட்டாக, சொந்தக்காரன் நாயை வந்துகேட்டு அதைக் கொண்டுபோக விரும்புமிடத்து, அச்சொந்தக்காரனிடமிருந்து அறவிடும்படியும் எவருக்கும் எழுத்துமூலமாக அதிகாரம் கொடுப்பது அக்கிராசனருக்கு நியாயமுறையாகும்.

9 E (2) (r) ம் பிரிவு.

காட்டுக் காய்ச்சல் அனுகாவண்ணம் தடுத்தல்.

ஆயிரத்துத் தொளாயிரத்துப் பன்னிரண்டாம் ஆண்டு மாசிமாதம் பதினாறாந் தேதியிலன்று 6,489 ம் இலக்கத்தைக்கொண்ட "கசெற்" பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்டு இப்போது வழங்கிவரும் உபவிதி இதிற் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும்.

வட மாகாணம் யாழ்ப்பாண இறைவருமான டிஸ்திறிக்கிலுள்ள பருத்தித்துறை, வல்லுவெட்டித்துறை ஊர்காவற்றுறை ஆகிய சிறு நகர்களின் சுகசங்கவெல்லைகட்குட்பட்ட நிலங்களி னெல்லாச் சொந்தக்காரரும் அல்லது அவைகளிற் குடியிருப்பவர்களெல்லாரும் அந்நிலங்களிலிருக்குஞ் செடிகளையும் துர்க்கந்தத்தையுஞ் சுகவீனத்தையுங் கொடுக்கக்கூடிய மற்று மெவ்வகைப் பூண்டுகளையுங் களைந்துவிடவேண்டியதுமல்லாமல், அந்நிலங்களிலிருக்குங் குப்பை கஞ்சல்களைக் கூட்டியகற்றிவிடுவதுடன், தண்ணீர் நிலைபாய் நிற்பதனால் நுளம்புவர்க்கம் பெருகுவதற் கேதுவாயிருக்கக்கூடிய பாத்திரங்கள், இடங்குகளாகிய இவைகளையும் இவைகளைப்போன்ற மற்றெவைகளையு மகற்றிவிடவேண்டியது.

9 E (2) (s) (a) (b) (c) ம் பிரிவுகள்.

மலகூடங்கள்.

ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்தாறும் ஆண்டு புரட்டாசிமாதம் இருபத்து நான்காம் தேதியிலன்று 7,547 ம் இலக்கத்தைக்கொண்ட "கசெற்" பத்திரிகையில் பிரசித்தப்படுத்தப்பட்டு இப்போது வழங்கிவரும் உபவிதி இதிற் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

1. (a) எவ்வீட்டின் அல்லது கட்டடத்தின் அல்லது காணியினதும் சொந்தக்காரரை அல்லது குடியிருப்பவரை (1) அவர் வசிக்கும் இடத்தில் மலக்குழியிருப்பின் அதை மூடிவிடும்படியும், (2) வசிக்குமிடத்தில் மலத்தைப் புதைத்து அல்லது வேறு விதமாக அகற்றிவிடுவாராகில் அவ்விதம் செய்யாது விடவும் அதற்குப் பதிலாக மலகூடம் கட்டி மலவாளி வைக்கும்படியும் சௌக்கியாதார சங்கத்தின் உத்தரவைக்கொண்டு சங்கத்தலைவர் எழுத்துமூலமாக அறிவித்தல் கொடுக்கலாம்.

(b) மேற்சொல்லப்பட்ட (a) ம் கீழ்ப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட கட்டளையைக் கவனியாமல் மீறி நடக்கும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர் ஆவர்.

2. காணியில் மலகூடவாளி அல்லது மலக்குழியிருக்கும் ஒருவருக்குச் சங்கத்தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் இடத்தில் மலத்தைப் புதைப்பதற்கு அல்லது வேறு விதமாக அகற்றிவிடுவதற்கு சௌக்கியாதார சங்கத்தலைவர் எழுத்து மூலமாய் உத்தரவு கொடுக்கலாம். தன் வளவில ஒரு மலகூடம் அல்லது மலக்குழியுள்ள எவ்வீட்டுக்காரராவது சங்கத்தலைவரிடம் உத்தரவு பெறாமல் தன் வளவில் அல்லது சங்கத்தலைவரால் உத்தரவு கொடுக்கப்பட்ட இடத்திலன்றி வேறிடத்தில் மலத்தைப் புதைக்கவிட்டால் அவர் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர் ஆவர்.

3. யாழ்ப்பாணம் டிஸ்றிக் சௌக்கியாதார சங்க எல்லைகளுள் மலகூடம் கட்டி மலவாளி வைத்திருக்கும் எல்லாக் காணிச்சொந்தக்காரரும் அல்லது காணிக்குள் குடியிருப்பவர்களும், மலத்தை எடுத்துச் சுத்தப்படுத்துவதற்காக வாளி ஒன்றுக்கு மாதம ரூபாய் 1.50 சதம் அல்லது சங்கத்தினால் காலத்திற்கு காலம் நியமிக்கப்படும் தொகையை ஒவ்வொரு மாதமும் 10 ந் திகதிக்குமுன் சௌக்கியாதார சங்கக் கந்தோரில் கட்டவேண்டும்.

4. எந்தக் காணிச் சொந்தக்காரரையாவது காணியில் குடியிருப்பவரையாவது வாளி வைத்தெடுக்கும் மலகூடங்கள் குறிக்கப்பட்ட காலத்திற்குள் கட்டப்படவேண்டுமென்று சங்கம் எழுத்துமூலமாகக் கட்டளைப்பண்ணலாம். அப்படிக் கட்டப்படும் மலகூடம் சங்கத்தினால் நியமிக்கப்பட்ட இடத்திலும் அவர்களால் சொல்லப்படும் பிரமாணத்தின்படியுங் கட்டப்பட வேண்டும்.

(b) (a) ம் கீழ்ப்பிரிவின்படி இடப்பட்ட கட்டளைப்படி செய்யத்தவறும் எவரும் ஓர் அடாத்துச்செய்த குற்றமுடையவர் ஆவர்.

9 E (2) (t) ம் பிரிவு.

பொதுவாக இடங்களைத் துப்புரவாக வைத்திருத்தல்.

சௌக்கியாதாரச்சங்க எல்லைக்குள்ள எல்லாக் காணிகளின் சொந்தக்காரரும் வாடகைக்காரரும் அல்லது அவைகளிற் குடியிருப்போரும் அக்காணிகளைத் துப்புரவாயும் கழிவு குப்பை துர்க்கந்தமுள்ள அல்லது சுகத்துக்குப் பழுதான புல்பூண்டுகளும் சுகத்துக்கு நட்டம் வருவிக்கக்கூடிய எல்லாச் செடிகளும், பயிர்களும் இல்லாமலும் வைத்திருப்பதுமன்றி தண்ணீர் நின்று நுளம்புகள் பெருகக்கூடிய எல்லாப் பாத்திரங்கள், கலங்கள் முதலானவைகளையும் அவ்விடங்களிலிருந்து அகற்றிவிடவும வேண்டும்.

2. சாம்பர், கூட்டிய குப்பை, கூளம் அல்லது வேறு கழிவுகள் முதலியவைகளை எவராவது தன்னுடைய வளவுகளிலேயிருந்து சௌக்கியாதார சங்கத்தின் தெருக்கூட்டிகளைக்கொண்டு அகற்றுவிக்க விரும்பினால் அவைகளைச் சௌக்கியாதார சங்கம் கற்பிக்கும் விதமான மூடியுள்ள வாளிக்குள், பெட்டிக்குள் அல்லது வேறு எந்தவிதமான தொட்டிகளுக்குள்ளும் போட்டுத் தங்கள் வளவுகளுக்கு வெளியே தெருவோரத்தில் சங்கம் காலத்துக்குக் காலம் முறமையாக வெளிப்படுத்தும் நேரங்களில் வைப்பதுமன்றி தெருக்கூட்டிகள், அத்தொட்டிகளில் பெட்டிகளில் அல்லது வேறு பாத்திரங்களிலுள்ள குப்பைகளை எடுத்துக் கொட்டிக்கொண்டு போனதற்குப்பின் அரை மணித்தியாலத்துக்குள் அவைகளை அத்தெருவிலிருந்து எடுத்துப்போடவேண்டும். சாம்பர், குப்பைகள், கழிவுகள் மற்றும் கூளங்களை எவரும் மேற்சொல்லிய பிரகாரமன்றி எந்தத் தெருவிலேனும் வைக்கவாவது எந்தப் பொது இடத்திலேனும் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தால் அவைகளில் போட்டல்லாமல் மற்றப்படிக்கு வைக்கவாவதுபடாது.

3. சௌக்கியாதாரசங்க எல்லைக்குளுள்ள எந்த வீட்டினதும் கட்டடத்தினதும், அடைப்பினதும் அல்லது வளவினதும் சொந்தக்காரனை அல்லது அதிற் குடியிருப்போனை அந்த வீட்டுக்கு, கட்டடத்துக்கு, அடைப்புக்கு அல்லது வளவுக்குச்சேர்ந்த எந்த மலசல கூடத்திலிருந்தும் குழிகக்கூசிலிருந்தும் சௌசகூடத்திலிருந்தும் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட அறிவித்தலிற் சொல்லிய காலத்துக்குள் அழுக்கை அகற்றும்படி அல்லது அகற்றுவிக்கும்படி எவ்வேளையிலும் எழுத்துமூலம் கேட்பது அக்கிராசனருக்கு நியாயமுறையாகும். அவ்வறிவித்தல் தனக்கு ஒப்புவிக்கப்பட்டு ஏழு நாளைக்குள் அச்சொந்தக்காரன் அல்லது குடியிருப்போன் அவ்வறிவித்தலிற் கேட்டிருக்கும் வண்ணம் செய்யத் தவறுமிடத்து, அக்கிராசனர் செய்யவேண்டிய வேலையைச் செய்விக்கலாம. மேலும் அப்படிச் செய்விக்கும் பொருட்டாக அவ்வீடு, புறவீடு, கட்டடம், அடைப்பு அல்லது வளவுக்குள் வேண்டிய வேலையாட்களுடனும் கருவிகள் சாமான்களுடனும் செல்வதற்கு அக்கிராசனருக்குத் தத்துவமுண்டு. இவ்வண்ணம் அவரால் செலவளிக்கப்படும் செலவுகள் சொந்தக்காரனிடமிருந்து சங்கத்துக்கு வரவேண்டிய ஓர் கடனாக அறவிடப்படக்கூடியவைகள் ஆகும்.

4. மாடு, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு அல்லது பன்றி யெதுவும் செத்திருக்கும் எந்த வீட்டிலேனும் வளவிலேனும் குடியிருக்கு மெவரும் அது செத்து நாலு மணித்தியாலத்திற்குள் அல்லது அம்மிருகம செத்தது இரவிலானால் விடிந்து நாலு மணித்தியாலத்திற்குள் ஒன்றில் தன் செலவில் பிணத்தைப் புதைப்பித்துவிட வேண்டும் அல்லது மிருகம் செத்ததைப்பற்றி சங்க மேல்விசாரணைக்காரனுக்கேனும் பரிசோதகருக்கேனும் அறிவித்தல் வேண்டும. அப்படி அறிவிக்குமிடத்து அக்கிராசனர் தீர்மானிக்கும் வீதத்தின்படி அப்பிணத்தை அங்கேயிருந்து கொண்டுபோய்ப் புதைப்பதற்கு வரும் செலவுகளைச் சங்கத்துக்கு அவர் கொடுத்தல வேண்டும்.

5. காலை ஏழு மணிக்கும் மாலை ஐந்து மணிக்குமிடையில், சங்க எல்லுக்குளுள்ள எந்தக் கட்டடத்துக்குள்ளேனும் வளவுக்குள்ளேனும் சென்று அக்கட்டடம் அல்லது வளவு சௌக்கியாதாரத்துக்கு ஏற்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கிறதோ வென்றறிந்துகொள்வதற்காக வேண்டிய சகல காரியங்களையும் செய்வது எப்பரிசோதகருக்கேனும், அக்கிராசனரால் எழுத்துமூலம் அதிகாரம் கொடுக்கப்பட்ட எந்த உத்தியோகஸ்தருக்கேனும் நியாயமுறையாகும்,

6. எவ்விதமான அனிக்கு, பயனை, ஊத்தை, குப்பை கூளமேனும் மழைத்தண்ணீர் நிற்கக்கூடிய பழைய போத்தல்கள், தகரங்கள், சட்டிகள் சிரட்டைகள் அல்லது வேறெந்தவிதமான பாத்திரங்களேனும் எந்தத் தெருவிலாவது ரோட்டிலாவது, வேறு இடத்திலாவது அல்லது அத்தெருவுக்கு அல்லது ரோட்டுக்கு அல்லது பொது இடத்துக்குச் சேர்ந்த எந்தக் காணியிலும் சனங்கள் குடியிருக்கும் எந்த வீட்டுக்கும் சமீபத்திலுள்ள எந்தக் காணியிலேனும் வளவிலேனும் ஒருவரும் போடப்படாது. மழைத்தண்ணீர் நிற்கக்கூடிய பழைய போத்தல்கள், தகரங்கள், சட்டிகள், சிரட்டைகள் அல்லது எல்வகையான வேறு பாத்திரங்களும் சுட்டெரிக்கப்பட வேண்டும அல்லது சௌக்கியாதார சங்கத்துக்குரிய குப்பைக் கிடங்கிற் கொண்டுபோய்க் கொட்டப்பட வேண்டும்.

7. சனங்கள் குடியிருக்கும் எந்த வீட்டுக்கும் சமீபத்திலுள்ள நிலத்தில் அல்லது வளவில் களைப்பூண்டுகள் அல்லது துர்க்கந்தமான அல்லது அருவருப்புண்டாக்கக்கூடிய பயிர்கள் வளர்ந்திருப்பதினால் அல்லது பயனை, அழுக்கு, குப்பை குவித்திருப்பதினால், அல்லது தண்ணீர் கட்டுப்பட்டு நிற்பதினால், அல்லது தண்ணீர் தங்கிநிற்கக்கூடிய பாத்திரங்கள் அவ்விடங்களிலிருப்பதினால் சௌக்கியாதாரத்துக்கேடான நிலையில் அந்நிலம் அல்லது வளவு இருக்கிறதென்று அக்கிராசனருக்குத் தோற்றும் எந்த வேளையிலும் அந்நிலத்தின் சொந்தக்காரனுக்கு அல்லது அதிற் குடியிருப்பவருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் கொடுத்து அந்நிலத்தை சௌக்கியாதாரத்துக்கேற்ற நிலையில் வைப்பதற்கு வேண்டிய வேலையெதையும் செய்யும்படி அக்கிராசனர் கேட்கலாம். குறிக்

கப்பட்ட காலத்துக்குள் சொந்தக்காரன் அல்லது அந்நிலத்தில் அல்லது வளவிற் குடியிருப்போன் அவ்வேலையைச் செய்யத் தவறுமிடத்து, அல்லது பிற்பாடு எப்போவாவது மேலே சொல்லிய பிரகாரம் சௌக்கியாதாரத்துக்குக் கேடான ஒலைபில் திரும்பவும் அக்காணியை வரவிட்டால், தேவையான வேலையை அக்கிராசனர் செய்விக்கலாம். அக்காணிக்குள் அல்லது அக்காணியில் தேவையான வேலையாட்களுடனும் கருவிகள் சாமான்களுடனும்செல்வதற்கு அவருக்குத் தத்துவமுண்டு. அப்படிச் செய்ததினால் வந்த செலவுகள் சொந்தக்காரனிடமிருந்து சங்கத்துக்குச் செல்லவேண்டிய ஓர் கடனாக அறவிடப்படக்கூடியனவாம். ஆயின், அக்கிராசனர் வழக்குத் தொடர்வது புத்தியென்று கண்டால் எந்த வேளையிலாவது அப்படி அவர் வழக்குத்தொடர்வதை இந்த விதானத்திலுள்ள எதுவும் தடுக்கமாட்டாது.

8. சனங்கள் குடியிருப்பதற்குப் பாவிக்கும் ஒவ்வொரு வீட்டையும் அல்லது குடிசையையும் பழுதுகளில்லாமல் வைத்திருப்பது அவ்வீட்டின் அல்லது குடிசையின் சொந்தக்காரனின் கடமையாகும். ஆயின் வாடகைக்காரன் அல்லது வீட்டிற் குடியிருப்போன் இப்படிச் செய்வதற்குப் பொருந்திக்கொண்டால் அக்கடமை காரியத்துக்கேற்றபடி வாடகைக்காரன்மேல் அல்லது குடியிருப்பவன்மேல் விழுந்ததாகும்.

9. அவ்வீடு அல்லது குடிசையெதுவும் சௌக்கியத்துக் குதவாத நிலையிலும் அதிற் குடியிருப்பவர்களின் அல்லது அயலிருப்பவர்களின் சுகத்துக்குத் தீங்கான நிலையிலும் இருக்கத்தக்கதாகப் பழுதுகள் உள்ளதாயிருக்கிறதென்று அக்கிராசனருக்குத் தோற்றும் எவ்வேளையிலும் காரியத்துக்கேற்றபடி அவர் அவ்வீட்டைப் பழுதில்லாமல் வைத்திருக்கும் கடமை தன்மேல் விழுந்தவராகிய சொந்தக்காரனுக்கு வாடகைக்காரனுக்கு அல்லது குத்தகைகாரனுக்கு ஓர் அறிவித்தல் எழுத்துமூலம் ஒப்புவிக்கப்படும்படி செய்து, அவ்வறிவித்தலில் குறிக்கப்படும் ஓர் நியாயமான காலத்துக்குள் அவ்வீட்டை அல்லது குடிசையை சௌக்கியாதாரத்துக்கு ஏற்ற நிலையில் வைத்திருப்பதற்கு வேண்டிய எவ்வேலையையும் செய்யும்படி கேட்கலாம். அச்சொந்தக்காரன், வாடகைக்காரன் அல்லது குடியிருப்போன் குறித்த காலத்துக்குள் செய்யவேண்டிய வேலையைச் செய்யத் தவறினால், அக்கிராசனர் அவ்வேலையைச் செய்விக்கலாம், அப்படிச் செய்விப்பதனால் வரும் செலவு அச்சொந்தக்காரன், வாடகைக்காரன் அல்லது குடியிருப்பவனிடமிருந்து சங்கத்துக்குச் செல்லவேண்டிய ஓர் கடனாக அறவிடப்படக்கூடியதாகும்.

10. ஒரு பொதுக் கக்கூசில் அல்லது மலம் கழிப்பதற்காகப் புறம்பாக வைக்கப்பட்ட கட்டடத்தில் அல்லது அடைப்பிலன்றி, எப்பட்டணத்தின் எல்லைக்குள்ளும் உள்ள எந்தப் பெருவீதியிலேனும், தெருவிலேனும், ரோட்டிலேனும், பாதையிலேனும் அல்லது வேறெந்தப் பொது விடத்திலேனும், எவரும் மலசலங் கழிக்கப்படாது.

நிவாரணங்கள்.

இதனோடிணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையிற் சுட்டிய உபவிதிகள் இதனால் நிவாரணமாக்கப்படுகின்றன.

அட்டவணை.

காட்டுக் காய்ச்சலைப்பற்றிய 1912 ம் ஆண்டு மாசி மாதம் 12 ந் தேதியிலன்று 6,489 ம் இலக்க "கசெற்" பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்ட உபவிதி :—

குண்டு குழிகள் தோண்டுவதைப்பற்றியும் மண் வெட்டியெடுப்பதைப்பற்றியும் 1913 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 12 ந் தேதியிலன்று 6,580 ம் இலக்க "கசெற்" பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்ட உபவிதி.

அருவருப்புண்டாக்கக்கூடிய வியாபாரங்களைப்பற்றி 1913 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 12 ந் தேதியிலன்று 6,580 ம் இலக்க "கசெற்" பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்ட உபவிதி

கோதம்பை யப்பச் சாலைகளைப்பற்றி 1926 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 17 ந் தேதியிலன்று 7,546 ம் இலக்க "கசெற்" பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்ட உபவிதி.

மலகூடங்களிலிருந்து அழுக்குக் கொண்டுபோவதைப்பற்றி 1926 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 26 ந் தேதியிலன்று 7,547 ம் இலக்க "கசெற்" பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்ட உபவிதிகள்.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

கஸ்றம்ஸ் எல்லையுள் பெற்ரு உவேயர்கவுஸ் (Pettah Warehouse) க்கு அணித்தாக புதிதாய்க் கட்டப்பட்ட தேய்த் தண்ணீர்க் கடையொன்று 1929 ம ஆண்டு யூன்௴ 15 ந் திகதி தொடக்கம குத்தகைக்குக் கொடுப்பதற்காக கொழும்புத் துறைமுகச் சங்கத்தலைவரால் 1929 ம ஆண்டு மே௴ 30 ந் திகதி வியாழக்கிழமை மத்தியானம 12 மணிவரைக்கும கேள்விக்கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும, மாதம 50 ரூபாய் வீதத்திறகுக் குறைந்த குத்தகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கொழும்புத் துறைமுகச் சங்கத்தலைவர் எல்லாக் கேள்விக் கடதாசிகளையுமாவது அல்லது யாதாமொன்றையாவது ஏற்காது விடத் தத்துவமுடையராவர். மற்றெல்லா விபரங்களும கொழும்புத் துறைமுகச் சங்கக் காரியதரிசியின் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம.

கேபெற் கே. கீலியர்,
கொழும்புத் துறைமுகச் சங்கத்தலைவருக்காக

கொழும்பு 1929 ம ௵ மே௴ 14 ௳.

---

இத்தாற் சகலரு மறியவும் இவ்வாண்டு சிவியாதெரு உப்பளத்திற்குச் சேர்க்கும் உப்பை சிவியாதெருவிலிருந்து யாழ்ப்பாணம் கரையூர் உப்புமாலுக்கு வண்டியில் ஏற்றுக்கொண்டுபோய்க் கொடுக்க விரும்புபவர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம்.

2. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இணைப்பிரதிகளாக ஒட்டி முத்திரை வைத்து மேல்விலாச மிட்டிருக்க வேண்டும்.

(a) மூலப் பிரதியில் வடமாகாணம் கவுண்மேந்து ஏசென்றுவுக்கு மேல்விலாசம் எழுது.

(b) இணைப்பிரதியில் கொழும்பு அரசிறை வருமான காரியஸ்தருக்கென்று மேல்விலாசம் எழுதுக.

3. சிவியாதெரு உப்பு இழுக்க கேட்கும் கேள்விப்பத்திரம் என்று உறையில் இடதுபக்க மேல்மூலையில் எழுதவேண்டும். 1929 ம் ஆண்டு ஆனி மாசம் 11 ந் திகதி செவ்வாய்க்கிழமை மத்தியானத்துக்கு முன் கவண்மேந்து ஏசென்றர் கந்தோரிலும் அரசிறை வருமான காரியஸ்தர் கந்தோரிலும் சேரவேண்டியது.

4. கேள்விப்பத்திரம் அதற்கென்று அச்சடிக்கப்பட்ட கடதாசியில் எழுதவேண்டும். அக்கடதாசிகள் யாழ்ப்பாணக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். அப்படியான கடதாசியில் எழுதாத கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்பட மாட்டா. மாற்றங்களுக்குக் கைபொப்ப முதலெழுத்துக்களிடப்பட வேண்டும். அல்லாவிடில் கேள்விப்பத்திரங்கள் பிழையென விலத்தப்படும்.

5. கேள்விப்பத்திரக் கடதாசிகள் பெற விரும்புவோர் எந்தக் கச்சேரியிலாவது ரூபா 50 கட்டிப் பற்றுச் சீட்டைக்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று கவுண்மேந்து ஏசென்றினால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவரால் அறிவிக்கப்பட்டுப்

பத்து நாளைக்குள்ளாகப் போதிய பிணை கொடுக்கத் தவறினால் அல்லது ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுத்தால் கட்டப்பட்ட காசு பறிமுதலாக்கப்படும். அப்படித் தவறியவர்களின் பெயர் கவுண்மேந்துக் கொந்திறுத்துக் கொடுக்கப்படா தென்று தள்ளப்பட்டவர்களுடைய பெயர் பதியப்படும் இடாப்பிலே சேர்க்கப்படும். ஒப்பந்தம் நிறைவேற்றியவுடன் கட்டிய காசு முதலியவை திருப்பிக் கொடுக்கப்படும்.

6. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியான மனுஷர் பிணை நிற்போமென்று சம்மதம் காட்டும் பத்திரமும் அனைத்திருக்க வேண்டும். அவர்களுடைய மேல்விலாசமும் காட்டியிருக்க வேண்டும்.

7. ஒவ்வொரு ஒப்பந்தக்காரனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக போதிய பிணைகாறர் பிணை யுறுதிக்குச் சேரவேணும் மற்றும் காரியங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் அறிந்துகொள்ளலாம்.

8. அரசாட்சியாரிடம் ஒப்பந்தம் எடுத்து அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றத் தவறியவர்களுடைய டாப்பில் தனித்தேனும் மற்றவர்களுடன் ஒருமித்தேனும் காணப்படும் பேர்வழிகாரருடைய ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. அன்றியும் ஒப்பந்தக்காரன் அந்த இடாப்பிலுள்ளவர்களின் யாரையாவது அல்லது வடமாகாண அரசாட்சி ஏசென்றர் தமக்குப் போதியதெனக் கண்ட நியாயங்களை எழுத்தில் கொடுத்துத் தடைநோத்தீசு கொடுப்பின் அப்படித் தடை செய்யப்பட்டவரைத் தம் ஊழியத்தில் உபயோகிக்கப்படாது.

9. மேற்சொல்லியவைகளுக்கேற்க எழுதப்படாத கேள்விப்பத்திரங்கள் கவனிக்கப்படமாட்டாது.

10. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் அல்லது எல்லாவற்றையும் ஏற்க வல்லது நியாயம் சொல்லாது மறுக்க முழுஉருத்தும் கவுண்மேந்துக்கு உண்டு.

யாழ்ப்பாணக் கச்சேரி
1929 ம் ௵ வைகாசி௴ 13 ௳.

எச். எஸ். எம். ஹோர்,
கவன்மேந்து ஏசன்றுக்காக.

---

1929 ம் ஆண்டு ஐப்பசி௴ 1 ந் திகதி துவக்கம் 1930 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 30 ந் திகதி வரையிலுள்ள ஒரு வருடக் காலத்துக்கு இதனடியிற் காட்டப்படும் புத்தளம் சலாபம் டிஸ்திறிக்குகளிலுள்ள ஆயக்குத்தகைகளை வாங்குவதற்கு விரும்புவோர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களில் ஒழுங்காகக் கையொப்பமும் திகதியுமிட்டு புத்தளம் உதவி ஏசண்டுத்துரை யவர்களுக்கு 1929 ம் ஆண்டு ஆனி௴ 20 ந் திகதி, முற்பகல் 10.30 மணிக்குமுன் ஒவ்வோர் கேள்விக்காரரும் முகாமுகமாய்க் கொடுக்கவேண்டியது, மேற்குறித்த நேரத்தின்பின் தவால் மார்க்கமாக வரும் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திர மனுப்பப்படும் உறைகள் ஒவ்வொன்றிலும் மேற்பக்கத்து இடதுமூலையில் "ஆயக்குத்தகைக் கேள்விப்பத்திர" மென்று எழுதப்படவேண்டியது.

இதனடியிற் காட்டப்படும் ஒவ்வோர் ஆயத்துக்கும் பிறம்பு பிறம்பான கேள்விப்பத்திரங்க ளனுப்பப்படவேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் கேள்வி ஏற்றவுடன் கேள்வித்தொகையின் பத்திலொன்று முற்பணமாகக் கட்டவேண்டியது. பின்னர் உத்தம-தேசாதிபதியவர்கள் மேற்படி கேள்வியை அங்கீகாரஞ்செய்து அவ்வங்கீகாரம் கேள்விக்காறருக்கு அறிவிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் கேள்வித்தொகையின் அரைவாசிக்குப் பெறுமதியான ஆதனம் அல்லது கேள்வித்தொகையின் மூன்றிலொரு பங்கை ரொக்கமாகப் பிணைகட்டவேண்டியது.

முடிக்குரிய பிரக்கிராசியார் கேள்விக்காரர் பிணைகொடுக்கு மாதனங்களி னுறுதிகளைப் பரிசோதனை செய்யவும் பிணையுறுதியைப் பரிசோதனை செய்யவும் சரியெனத் தீர்ப்புச் சொல்லவும் இன்னும் சாதனங்களைப் பரிசோதனை செய்யவும் பிணையுறுதி எழுதவும் வேண்டிய செலவுகளையும், 1910 ம் ஆண்டு 10 ம் இலக்கச் கட்டளைச்சட்டத்தின்படி தேள்வையான முத்திரைச் செலவுக்காவும் கேள்விக்காரரே பணம் கட்டவேண்டியது.

பிணைகொடுக்கு முறுதிகளுடன் அவ்வுறுதிகளிற் சொல்லப்பட்ட ஆதனங்களின் பெயரால் ஒரு பிசகுகளுமில்லையென்று பூமிபதிவுகந்தோர் தலைவரிடமிருந்து ஓர் அறிக்கைப் பத்திரமு மனைக்கப்பட வேண்டும். இப்பத்திரங்களின் செலவுகளெல்லாம் பிணைகொடுப்பவர்களே பொறுக்கவேண்டும்.

கேள்விகளின் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை ஏற்றுக்கொள்ளாது விடவும் அல்லது கேள்விகளின் சிலபாகங்களையே ஏற்றுக்கொள்ளுந் தத்துவம் உதவி ஏசண்டுத்துரை யவர்களுக்குண்டு.

இன்னும் விபரங்கள் தேள்வையாயின் என்னிடம்கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

வாய்க்கால்கள்.

1. நாத்தாண்டியா, | 2. மூனுத்துப்பிரிவு. | 3. பாலாவி.

துறைகள்.

1. புத்தளம் எத்தாலை.
2. ஷை கற்பிட்டி
3. கற்யுட்டி காரைத்தீவு.
4. கற்பிட்டி முகத்துவாரம்.
5. சலாபம் முகத்துவாரம்.

புத்தளம் கச்சேரி,
1929 ம் ௵ வைகாசி௴ 9 ந் தேதி.

ஓ. பி. இ. பெரோரா.
புத்தளம் உதவி ஏசண்டுத் துரை யவர்களுக்காக.

A. C. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.